

# செந்தமிழ்


| தொகுதி ௬௫ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௯. ஆனி<br>ஜூன்—1968 | பகுதி ௪ |
| --- | --- | --- |


## மதுரை மீனுட்சி கவசம்

—○—


வித்துவரத்தினம். இராம. சுப்பிரமணியம்.
மதுரை.


(அந்தாதி)

பொன்னங் கலைமின் புகழு
மதுரா புரிக்கிறைவி
கன்னங் கருங்குழல் காக்க
குளிர்ந்த கமலமுகம்
மின்னங் கயற்கணி காக்க
பிறைநேர் விளங்குநுதல்
மன்னங் கடம்ப வனக்கிளி
காக்க, மகிழ்ந்தினிதே!

தேவியே காக்க வளைந்த
புருவச் சிலைகளையென்
ஆவியே காட்சரி காக்க
இமைகள்என் ஆருயிர்ச்சஞ்
சீவியே காக்க குவளைநேர்
கண்கள் செவிகள்தமை
மேவியே காக்க விமலிவே
தாந்த விளக்கொளியே!

ஒளிசேர் கதுப்பை உமையவள்
காக்க, உருவம்இலா
வளிசேர் குமிழெனும் நாசியைக்
காக்க மனோன்மணியென்
அளிசேர் கனிவா யதரங்கள்
காக்க அமலனகத்
தளிசேர் சிவசக்தி காக்கசெந்
நாவைச் சவுந்தரியே!

தரியீ ரெடுதோ யிருவரி
சைப்பற் றரளங்களை
அரிமா சகோதரி காக்கவே
காக்கஅண் ணாக்கதனைத்
திரிசூலி கண்டம் பிடரினைக்
காக்க சிவையிருதோள்
கரிதோ லுடுத்த அரன்பனி
காக்க களிப்புறவே!

உறவரம் மலர்மின் உறைமார்
பகமே ஒருபதியை
மறவா மனோகரி காக்க
முதுகை மறலியினால்
இறவா வரந்தரும் என்அன்னை
காக்கஇரு பழுவைப்
பிறவா நெறியருள் பெண்மயில்
காக்க பிரிவறவே!

பிரியா விடையாள் வயிற்றினைக்
காக்காநா பிக்கமலம்
துரியா லயப்பரை காக்க
மருங்கினைத் தும்பையணி
பெரியா னுரிமைதான் பெற்றவள்
காக்கஎன் பிட்டமிரண்
டரியா சனத்தினள் காக்கஎன்
றென்றுமெய் யன்புறவே!

அன்பொடு மாசடா தாரமும்
காக்கஎன் அம்பிகைநல்
இன்பொடு ஞான சிவசக்தி
காக்க இயல்குறிகள்
முன்பொடு பின்பிலாள் காக்க
குதத்தைமா முப்புரைவெள்
என்பொடு மூட்டுக்கள் ஐம்புலன்
காக்க இமயமின்னே!

மின்ன விடையாள் எழில்தொடை
காக்கவியன் முழந்தாள்
அன்ன நடையினள் காக்க
கணைக்கால் அமலைசெங்கைக்
கன்ன லுடையாள் குதிக்கால்
பரடுகள் காக்கவெகு
சொன்ன முடையவள் காக்க
விரல்கள் துணைப்பதமே!

பதமது தந்தெனை யாட்கொண்
டிரவும் பகலும்நல்ல
விதவிதமான சுகங்களும்
தந்து விதிமுறையே
அதனத னுண்மை இதுஎன
ஓர்ந்தே அநுபவிக்க
நிதநித மென்றனைக் காக்க
காமாட்சி நினைப்புறவே!

நினைப்பு மறுப்புமில் லாதவள்
காக்களன் நெஞ்சமதில்
முனைப்பு செருக்கு மலைப்பும்
அகன்றிட முப்பொழுதும்
தனைப்பு நிதமுறச் செய்சிங்
தனையில் தழைத்திடநின்
றெனைப்புரந் தாசித் திடுமம்மை
காக்கவே என்றென் றுமே!

என்றனைக் காக்க வராகி
பகைவர் எதிர்முகமோ
அன்றி மறைமுக மாகவோ
சூழ்ந்தும் அகங்கரித்தும்
பொன்றல் கருதிப் பல்படை
கொண்டு பொரவரினும்
வென்றியெற் றீந்தவர் தோல்வியுற்
றோட விரட்டுகவே!

விரட்டி வரும்பல பூதவே
தாளம் வெகுவிதப்பேய்
அரட்டி வரும்முனி காட்டேறி
கூளி அரக்கர்குலம்
மிரட்டி இடர்தரும் காளி
கறுப்பன் மிடுக்கறத்தன்
கரத்தினைக் காட்டித் தொடாதெனைக்
காக்கமுக் கண்மணியே!

கண்ணோய் செவிநோய் அகநோய்
புறநோய் கலிதருநோய்
பெண்ணோய் புருடநோய் கோடான
கோடிப் பெயர்பெருநோய்
மண்ணோய் பொருணோய் இவற்றால்
அடியேன் மயக்கமுறா (து)
எண்ணோய் தவிர்த்து மகேசுரி
காக்க இளைப்பறவே!

இளைப்புறு பூனை குரங்குநாய்
சம்போ டெலிஅரணை
உளைப்புறு பற்பல் விடங்களைக்
கொண்ட உயிரினமாம்
வளைப்புதர்ப் பாம்பினம் நட்டுவாய்க்
காலிவகை இவற்றால்
விளைப்புறு மல்லல் படாதெனைக்
காக்க விபூதினியே!

பூதியில் உள்ளூர் வெளியூர்
இவற்றில் பொதுஇடத்தில்
வீதியில் திட்டுத் திடலில்
மலையில் விரிகடலில்
நாதியில் லாத இடங்களில்
ஏரி நதிக்கரையில்
ஆதியில் அந்தமில் லாதவள்
காக்க அநுதினமே!

மேட முதல்பன் னிரண்டு
மனையில் மிகுசுபராய்க்
கூட எழுவகை நாட்களும்
ஒன்பது கோட்களுமென்
பாட லனைத்துமா நன்மையே
செய்யும் படிதனதோர்
ஆட லரங்கினில் ஆடுவாள்
காக்க அழகுறவே!

அழகும் குணமும் அறிவும்
பொறையுமெய் யன்பருடன்
பழகும் திறனும் பயனும்
அருள்விழிப் பார்வையுநற்
கழகங் களிலிருந் தன்புக்
கலைகளைக் கற்றெழுகக்
குழகன் திருத்தாய் துணைசெய்து
காக்கஎன் கொள்கையையே!

கையை ஒருவனிடம் நீட்டி
யீயெனக் காட்டி நகை
மெய்யை வளைத்தவன் மீது
புகழ்ந்து விருதுபெறப்
பொய்யை நிசமாய் நிசத்தினைப்
பொய்யாய்ப் புகலுவதோ?
மெய்யை விளக்கித் துய்யவள்
காக்களன் வித்தைகளே!

வித்தை விதைத்து விளைவைப்
பெருக்கி விருந்திடலாம்
அத்தை வறுத்தே அவலிடித்
துண்டால்! அதன்பிறகே
எத்தை வயிற்றுக் கடைத்துயிர்
வாழ்வேன்? இமயவல்லி!
சத்தை வளர்த்துளச் சாந்தியைக்
காக்க சலிப்பறவே!

வேதனை செய்யும் சுயநலத்
தார்தீ வினையவர்க்கே
வாதனை செய்யுமே வற்பில்லி
சூனியம் வஞ்சனைநற்
சாதனை செய்யும் அடியார்க்
கிடரே தராவகையில்
போதனை செய்தெனமக் காக்க
சதாபரி பூரணியே!

பூரண னோடு பொதுவினில்
ஆடும் புனிதைமகா
காரண கார்ய மதுரை
மீனாட்சி கவசமதை
ஆரண மாக மதித்தோது
மன்பர் அகங்குளிர
நாரணர் தங்கையே நல்குவள்
எல்லா நலங்களுமே!

உலக மனைத்துமெய் யன்பிலே
இன்புற் றுவந்தவலக்
கலகமனைத்தும் கடந்தான்ம
நேயக் காட்சிகண்டிங்
கிலவ நெடுநாள் நனிவாழ்க!
வாழ்க!! இனியதமிழ்த்
திலக தயாபரி இன்னருள்
செய்க செழிப்புறவே!

நலம் வளர்க!

# பௌத்தம் வளர்த்த தமிழ்

—✻—

வை. தட்சிணமூர்த்தி எம். ஏ.,
(தமிழ் விரிவுரையாளர், சரசுவதி நாராயணன் கல்லூரி, மதுரை.)

முன்னுரை :

இந்திய மண்ணில் தோன்றி உலகனைத்தும் ஒளிவீசும் போதி முனிவர் தம் பௌத்த சமயக்காற்று, சங்க காலத்திலேயே தமிழில் வீசியுள்ளது. பண்டைத் தமிழர் வெளி நாடுகளோடு தொடர்பு கொண்டது போல் வடவிந்தியப் பௌத்தரோடும் தொடர்பு கொண்டமை சாலும். அசோகப் பெருமன்னர் இலங்கையில் பௌத்தம் போற்ற வழி செய்த நாளில் தமிழகத்தும் அது பரவ வழி செய்துள்ளார். இவண் பகைமை காரணமாகத் தமிழகத்தில் பௌத்தம் மறைந்ததேயன்றி அக் கருத்துக்கள் பரவாமலில்லை. பௌத்தர்கள் பரந்த உள்ளம் உடையவர்கள். அந்நாளில் பௌத்த சமயத்தை வளர்க்க விரும்பினும் அந்நாட்டு மக்களின் தாய்மொழியிலேயே அனைத்தையும் கூறவேண்டும் என்ற நல்லெண்ணத்தைப் புத்தர் பிரானே ஐய விளக்கமாக அவர்கட்கு அருளிச் சென்றுள்ளார்கள். இந்து சமயத்தின் குறுகிய எண்ணத்திற்கு அப்பாற்பட்ட நிலை இது. சமணரும், சைவரும், வைணவரும், பௌத்தர்களும் தமிழுக்கு வளந்தேடியவர்கள் எனினும் சமணர்களுடைய நூல்கள் காலத்தால் முந்திய சிறப்புக்கு ஆளாக்கப்பட்டு விட்டன.

சங்க காலத்தில் பௌத்தம் :

சங்கப் புலவர்களுள் இன்னார் பௌத்தர் என்று கூறத் தக்கோராகப் பலரின் பெயர்கள் விளங்கவில்லையெனினும் சங்க காலத்துள் பௌத்தர்கள் இல்லை என்று துணிய வாய்ப்பேதுமில்லை. அன்பையும், அறத்தையும் புகன்ற பௌத்தர் கருத்துக்கள் தமிழர் கருத்துக்களாகவே நவிலப்பட்டிருக்கலாம். இத்துணை ஐயங்கட்கிடையே இளம்போதியார் என்ற சங்கப் புலவர் போதி அறவோன் அடியினன் என்பதை நமக்கு வெளிக்காட்டுகிறார். (போதி என்பதனினின்று அவர் சமயம் பௌத்தம் என்பது பெறப் படுகிறது.) நற்றிணையில் இவரது பாடல்வருகின்றது. அன்றியும்

மணிமேகலை என்னும் காப்பியம் முழுக்க முழுக்கப் பௌத்தச் சார்புடையது என்பதில் ஐயமேதுமில்லை. இளங்கோவடிகளே சிலம்பில், மணிமேகலை பௌத்தம் சார்ந்ததைக் கூறுகிருர். இவற்றின் காலம் சங்கம் மருவியதாகலின் சங்க காலத்தில் உறுதியாகப் பௌத்தம் தமிழகத்தில் வாழ்ந்திருக்க வேண்டும் என்பதும் துணிபு இஃதேயன்றியும்உலகொப்ப, சமயச்சார்பற்ற திருக்குறள் ஏன் பௌத்த நூலாக இருக்கக் கூடாது என்ற கருத்தும் போற்றப்படுகிறது. ஆனல் திருக்குறளில் பௌத்தக் கருத்துக்கள் வருகின்றன என்பது மட்டும் உண்மை.

## தமிழ் எழுத்து வளர்ச்சி:

புத்தர் பிரானே பிராமி எழுத்து வகையைத் தோற்றுவித்துள்ளார். தமிழ் நாட்டில் அவ்வெழுத்துப் பரவியது. அண்மைக் காலவளவில்கூடக் கல்வெட்டுக்கள் பிராமி எழுத்துக்களிலேயே அமைந்துள்ளன. அசோகரால் அவ்வெழுத்துப் பரவச் செய்யப்பட்டது. பழைய தமிழெழுத்து இன்றைய எழுத்திலிருந்து வேறுபட்டிருந்தது. பௌத்தர் ற, ழ போன்ற எழுத்துக்களை மட்டும் வைத்துக்கொண்டு பிராமி எழுத்தில் எழுதியுள்ளார்கள். பிராமி எழுத்திலிருந்தே வட்டெழுத்து என்ற தமிழ் எழுத்து உண்டாகியது. வட்டெழுத்து என்பது இப்பொழுது இருக்கும் தமிழ்எழுத்தமைப்புக்கு முந்தியநிலை. பிராமியிலிருந்தே வடமொழிஎழுதக் கிரந்தஎழுத்துக்களும், தமிழ்எழுத வட்டெழுத்துக்களும் தோன்றின. இராசராச சோழன் காலம் வரை வட்டெழுத்துப் பயிற்சியைக் காண்கிருேம். இன்றை நாகரி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய எழுத்துமுறைகள் பிராமி எழுத்தின் வளர்ச்சியே.

## மணிப் பிரவாள நடை:

வைணவப் பெரியார்கள் பிரபந்த விளக்கங்களை மணிப்பிரவாள நடையில் எழுதிவைத்துள்ளனர். முதலில் அந்நடையைத் தமிழில் புகுத்தியவர்கள் பௌத்தர்களே. பௌத்தர் இயற்றிய இலக்கிய நூலான வீரசோழியத்தில் மணிப் பிரவாள நடை கூறப்பட்டுள்ளது. மணிப் பிரவாள நடையின் சாரணமாகத் தமிழில் சில பிரகதச் சொற்களும், வடமொழிச் சொற்களும் கலந்துள்ளன.

## பௌத்தர் இயற்றிய தமிழ் நூல்கள் :

இப்பொழுது நமக்குக் கிடைக்கும் பௌத்தர் இயற்றிய தமிழ் நூல்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. கி. பி. நான்காம் நூற்றுண்டில் தமிழ்நாட்டில் வாழ்ந்த புத்த தத்தர் என்பவர் பல தமிழ் நூல்களை எழுதியிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். வீரசோழிய உரையில் பல பௌத்த சமயச் செய்யுள்கள் மேற்கோள்களாகக் காட்டப்படுகின்றன. அவற்றின் நூற் பெயர்கள் தெரியவில்லை.

## இளம் போதியார் :

இளம் போதியார் என்ற சங்கப் புலவர் நற்றிணையில் ஒரு பாட்டைப் பாடியுள்ளார்.

## மணிமேகலை :

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றுன மணிமேகலை தமிழிலுள்ள பௌத்த சமய இலக்கியங்களுள் சிறப்புக் குரியது. குண்டலகேசி என்ற காப்பியமும் பௌத்த தமிழர் இயற்றியதே எனினும் அஃது இறந்துபட்டதாகையால் இன்றையளவில் நமக்குக் கிடைக்கும் பௌத்த இலக்கியங்களுள் பாராட்டத்தக்கது இதுவே. மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனர் என்பவர் இதன் ஆசிரியர். இதற்கு மணிமேகலைத் துறவு என்னும் பெயர் உண்டு. இக் காப்பியம் இளங்கோவடிகளின் முன்னர் அரங்கேற்றப்பட்டது. வரலாற்றுச் சூழலில் கதை சுவைபடச் செல்கிறது. இக்காப்பியத்தில் பௌத்த சமய அறவுரைகளை மிகுதியாகப் புகுத்தி எழுதியிருப்பதால் சற்றுச்சுவை குறைவாகவுள்ளது என்றுகூறுவதுண்டு. உயர்தரமான நீதியைக் கதையமைப்போடு இக்காப்பியம்கூறுகிறது. இடையிடையே பிற கதைகளும் விரவி வருகின்றன. பௌத்த சமயக் கருத்துக்களைக் கூறுமிடமெல்லாம் வடமொழிப் பயிற்சி, சற்று மிகுந்துள்ளது.

பௌத்த துறவிகள் வரலாற்றில் முதன் முதல் வெளிவந்த பெண் துறவியின் வரலாறு இதுவே. முப்பது காதைகளையுடையது இந்நூல். அழகும், கலையும் வாய்த்து மன்னன் மகனுல் காதலிக்கப்பட்ட நிலை இருந்தும், துறவு பூண்டு, போதி முனிவன்

பொன்னெறி போற்றி உலகமெல்லாம் பசியகற்றும் பணிபுரிந்த மணிமேகலை, கோவலன் மனைவியான மாதவியின் மகள் ஆவாள். பேராசிரியர் பூர்ணலிங்கம்பிள்ளை 'இக்காப்பியம் பௌத்த தர்மத்தை மாற்றுக் குறையாமல், தூய்மையாக விளக்குகிறது' என்கிறார்.

குண்டலகேசி :

யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் தருக்கத்திற்கு எடுத்துக்காட்டான நூல்களைக் கூறும்போது குண்டலகேசியையும் கூறுகின்றார். சமயச் சார்புடைய இந்நூல் முறையே சமணம் வைதீகம் ஆயவற்றைத் தருக்க நெறியிற் கண்டிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இது 'குண்டலகேசி விருத்தம்' என்ற பெயராலும் அழைக்கப்படுவதால் விருத்தப்பாவால் ஆயது என்று தெரியவருகிறது. நீலகேசி உரையிலிருந்து குண்டலகேசியின் ஆசிரியர் நாதகுத்தனர் என்று புலனகிறது. மணிமேகலைக் காப்பியத்தைப் போன்றே இதுவும் காப்பியத் தலைவியின் பெயரால் பெயர்பெற்றது. குண்டலகேசியும் ஒரு பௌத்த துறவியே. குண்டலகேசி என்பாள் புத்தர் காலத்திலேயே வடநாட்டில் வாழ்ந்தவர். இவரது வரலாறு பாலிமொழியிற்காணும் தேர்க்காதையிலும், தம்மபாதம், அங்குத்தரநிகாயா போன்றவற்றிலும் காணப்படுகின்றது இராசகிருகம் என்ற பேரூரையாண்ட மன்னனின் அமைச்சர் மகள், பத்திரை என்பவள். அவளது மயிர் சுருண்டிருந்தது. இல்லற வாழ்வு எய்திய பத்திரையை அவள் கணவன் வஞ்சம் கருதிக் கொலைசெய்ய முயன்றான். அதனின்று தப்பி வாழ்க்கையில் வெறுப்புற்றுச் சமணசமயம் சார்ந்தாள். சாரிபுத்தர் என்ற பௌத்தத் துறவியிடம் வாதில் தோற்கிருள். இப்பத்திரை, பின்னர்ச் சமயம் மாறிப் பௌத்தத்தின் பெருமைகளை நிலைநாட்டிப் பிற சமயத்தாரை வாதில் வெல்கிருள் சுருண்ட தலைமயிரையுடைய பத்திரையின்வரலாற்றையே சுருண்ட தலைமயிரையுடையவள் என்ற அதே பொருள்படும் 'குண்டலகேசி' என்றபெயரால் நாதகுத்தனர் நூலாக்கியுள்ளார். குண்டலகேசி நூல் இப்பொழுது நமக்குக் கிடைக்கவில்லை எனினும் — தொல்காப்பிய உரை, யாப்பருங்கல விருத்தியுரை, வீரசோழிய உரைபோன்றவற்றுள் எடுத்துக்காட்டுச் செய்யுள்களாகச் சில நயம் மிகுந்த பாடல்கள் கிடைக்கின்றன.

**வீர சோழியம் :**

வீரசோழியம் என்பது ஓர் இலக்கண நூல். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆய ஐந்திலக்கணங்களையும் வட மொழி மரபும் தழுவி நவில்கின்றது புத்தமித்திரனர் என்னும் பௌத்தத்துறவியே இதன் ஆசிரியர். பெருந்தேவனர் என்பவர் இதற்கு உரை எழுதியுள்ளார். "எதிர் நூல்", "வீரசோழியக் காரிகை" என்பனவாய பெயர்களும் இந்நூலுக்கு உண்டு. கச்சியப்ப அடிகள் கந்தபுராணத்தில் வீரசோழிய இலக்கண மரபைக் கையாண்டுள்ளார். இன்று இந்நூலிற்கண்ட இலக்கண முறைகள் வழக்கில் இல்லை. வீரசோழிய உரையில், குண்டலகேசி விருத்தம், கலி விருத்தம், எலி விருத்தம், நரி விருத்தம், உதயணன் கதை, நிபாய சூடாமணி, பதியா நுட்பம், யாப்பருங்கலம், வச்சத் தொள்ளாயிரம், தண்டியலங்காரம் போன்ற நூல்கள் குறிப்பிடப்படுகின்றன. புத்தரைப்பற்றிய இனிமையான பாட்டுக்கள் எடுத்துக்காட்டுகளாக வருகின்றன. இந்நூலில் அகத்தியர் போதிசத்துவரிடம் தமிழ் கற்றதாகக் கூறப்படுகிறது சிவபெருமானிடம் அகத்தியர் தமிழ் கற்றதாக மரபு இந்நூல் வேறுபட்டு நவில்கிறது. வீரசோழியத்தைப் பின்பற்றிச் சிங்கள இலக்கண நூல் ஒன்றில் சில பகுதிகள் எழுதப்பட்டன. இதில் 181 சூத்திரங்கள் உள. இவ்விலக்கண நூல் பலவிடங்களில் முன்னூல்களோடு மாறுபடுகின்றது.

**சித்தாந்தத் தொகை :**

சிவஞான சித்தியார் பரபக்கத்திற்கு ஞானப் பிரகாசர் எழுதிய உரையிலும், நீலகேசி புத்த வாதச் சருக்க உரையிலும் 'சித்தாந்தத் தொகை' என்ற பௌத்த நூல் குறிப்பிடப்படுகிறது தீவினைகளை எண்ணி அவை பத்து வகை என்று 'சித்தாந்தத் தொகை' கூறுகிறது இதன் பாடல்களில் உரையிற் கையாண்ட சில அடிகள் தவிர பிற கிடைத்தில சித்தாந்தத் தொகை, பலரால் எழுதப்பட்ட தொகுப்பாக இருக்கலாம்.

**திருப்பதிகம் :**

திருப்பதிகம் என்பது புத்தர் பிரான் மீது இயற்றப்பட்ட தோத்திர நூலாக இருக்கலாம் என்பது மேற்கண்ட இரு உரைகளால்தாம் தெரிய வருகின்றது. வாழ்த்துச் செய்யுள்களைக்

கொண்ட இந்நூலும் கிடைத்திலது. இதன் ஆசிரியர் பெயரும் தெரியவில்லை.

## விம்பசாரக் கதை:

புத்தர் காலத்தில் வாழ்ந்து, அவருக்கு உதவிபுரிய முன் வந்து, அவருடையமாணவனுமாய்விளங்கிய பிம்பிசாரன்என்னும் மன்னவனின் வரலாற்றைக் கூறும் காப்பியமே இது. இக்காப் பியத்திலும் நான்கு அடிகள் தாம் இன்று நமக்குக்கிடைக்கின்றன. இதன் நடையைக் காண, இக் காப்பியம் ஆசிரியப் பாவினால் ஆயதாகலாம். இதன் பெயரை அறிய நமக்கு உதவுவதும் நீல கேசி உரையே.

## தமிழில் பாலிச் சொற்கள்:

தமிழகத்தின் பெரும்பகுதிகளிற் பலவற்றுள்ளும் பௌத்த சமயம் பரவிய காரணத்தால் அரசியல், வாணிகம், சமுதாயம் போன்ற வாழ்க்கைத் துறைகளில் தமிழில் பல பாலிமொழிச் சொற்கள் கலந்துள்ளன. பாலி மொழியே பௌத்தத்தின் வேத மொழி.பாடசாலை, சீலம், சாவகர், ஏது, வேதி, வேதிகை போன்ற பாலி மொழிச் சொற்கள் தமிழில் இன்று வழங்கி வருகின்றன. தானம், தோஷம், விஷயம், சந்தோஷம், இலட்சணம், வஸ்து போன்ற பாலிச் சொற்கள் தமிழிலும், வடமொழியிலும் வழங்கு கின்றன. நாவாய் என்ற கப்பலைக் குறிக்கும் சொற்கூடப் பாலிச் சொல்லாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## தமிழ் நாட்டில் பௌத்தப் பேரூர்களின் பெயர்கள்:

சாத்தமங்கை, போதிமங்கை, சங்கமங்கை, பௌத்தபுரம் போன்ற ஊர்களின் பெயர்கள் பௌத்த வழியிற் பிறந்தன வாகவே தோன்றுகின்றன. பௌத்தர்கள், தமிழ் நாட்டில் பேரூர்கள் அனைத்திலும் வாழ்ந்தனர். எனினும் இவ்வூர்களின் பெயர்கள்பௌத்தச் சார்புடையனவாகவே தோன்றுகின்றன.

## திருக்கோயில்களில் புத்தர் உருவங்கள்:

தமிழர் போற்றி வணங்கும் சைவத் திருக்கோயில்களில் சமயம் கடந்த நிலையில் புத்தர் பிரானின் சிலைகளைக் காண்கிறோம். திருவலஞ்சுழி, பள்ளுக்காஞ்சி, குடந்தை, தியாகனூர், செயங்

கொண்ட சோழபுரம், திருவிற்கோலம், நாகை, காரைக் கேணி போன்ற ஊர்க் கோவில்களிலும் பிறவிடங்களிலும் புத்தர் பிரானின் திருவுருவம் காட்சியளிப்பதே, பௌத்தம் தமிழை யும், தமிழரையும் ஆட்கொண்டுள்ளது என்பதற்குச் சான்றல்லவா?

## தமிழ்நாட்டுப் பௌத்தப் பெரியார் :

நற்றிணை நமக்கு இளம் போதியார் என்ற பௌத்தக் கவிஞரைக் காட்டியது. மணிமேகலை அறவண அடிகளைக் காட்டு கிறது. மணிமேகலையோ, பெரும் பௌத்தத் துறவி. அவள் அன்னை மாதவியும் அவ்வாறே. சீத்தலைச் சாத்தனாரின் பௌத்த ஞானம் மணிமேகலைக் காப்பியத்தில்ஒளிர்கின்றது. சங்கமித்திரர் என்ற தமிழ் பௌத்தத் துறவி இலங்கை மன்னன் ஒருவனைச் சமயம் மாற்றியுள்ளார். குண்டலகேசி ஆசிரியர் நாதகுத்தனார், உறுதியாகப் பௌத்தம் சார்ந்தவரே. புகார் நகரிற் பிறந்த புத்ததத்த மகாமதார் திரிபிதங்களின் பல பகுதிகட்கு உரை எழுதியுள்ளார். கணதாசர் என்பவர் ஒரு விகாரைக் கட்டியுள் ளார். மற்றும் பலரும் இவ்வாறு பணிபுரிந்துள்ளனர். காஞ்சி யைச் சேர்ந்த தருமபாலர் சோழநாட்டுப் 'போதிமங்கை' என்ற ஊரில் பிறந்த புத்த நந்தி, சாரி புத்தர், பாண்டிநாட்டில் பிறந்த வச்சிரபோதி, வீர சோழிய ஆசிரியரான புத்தமித்திரனார், பெருந் தேவனார் ஆய எண்ணிறந்த தமிழ்ப் பெரியோர்களின் உள்ளங் களைக் கவர்ந்துள்ளது பௌத்தம்.

## கல்வெட்டுகளும் செப்பேடுகளும் :

பௌத்தச் சார்புடைய ஆனைமங்கலச் செப்பேடுகளும், வேறு சில கல்வெட்டுகளும், தமிழ்—தமிழக வரலாறுகட்கும் பெரும் உதவிகள் செய்வன.

## முடிவுரை:

பௌத்தம் தோன்றிய நாள்தொட்டுத் தமிழகத்தோடு அது கொண்ட உறவு காரணமாகத் தமிழில் பௌத்த மணம் கமழ்ந் தது. தமிழ் நூல்களில் பௌத்தக் கொள்கைகள் மாற்றுருவில் புகுந்துள்ளன. கருத்தோடு காப்பியங்களையும் தமிழுக்கு ஈந்த பௌத்தம் தமிழ் நாட்டில் பரவாமைக்கும், அவ்விலக்கியங்கள்

அழிந்தமைக்கும் காரணம் யாதோ நாம் அறியோம். இன்றளவும் நூல்களாலன்றி ஓவியங்களாகவும், சிலைகளாகவும் புத்தர்பிரான் திருவுருவம் தமிழர்தம் இல்லங்களை அழகுபடுத்துகிறது. தமிழ் பெற்ற பௌத்தமும், தமிழர் கண்ட பௌத்தமும் எத்தனையோ இன்னல்கட்கிடையே இன்றும் நம் நெஞ்சத்தில் குடிகொண்டுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழ் நாட்டில் பௌத்தம் தனிப்பெயரால் விளங்கவில்லை. வாழ்வோடு கலந்து விட்டது.

—— ❋ ——

# பாம்புகளும் பாவலர்களும்

—[:-:]—

**A. ஆபிரகாம், M. A.,**
(விலங்கியல் துறைத் துணைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை)

சங்கத் தமிழ்ப் புலவர்கள் இயற்கையை உற்று நோக்கக் கூடியவர்கள் என்பது அவர்கள் இயற்றியுள்ள நூல்களைத் துருவி ஆராய்ந்தால் நன்கு புலனாகும். சில புலவர்கள், பாம்புகளின் வாழ்க்கைக் குறிப்புகளைச் சிலேடை வாயிலாக வெளியிட்டுள்ளார்கள். ஒரு புலவர், பாம்புக்கும் எள்ளுக்கும் சிலேடை அமைத்தார். பாம்பையும் எள்ளையும் ஒப்பிட்டாற் போல வாழைப்பழத்தையும் நாகப் பாம்பையும் ஒப்பிட்டு நல்லதொரு கவி நல்கினர், இன்னும் ஒரு நாவலர். வன்மீக நாதரையும் பாம்பையும் ஒப்பிட்டார் இன்னொரு வண்ணக் கவிஞர்.

புலவர்கள் தங்கள் பாக்களில் பாம்புகளைப் பற்றிச் சொல்லிய கருத்துக்களை நம் கருத்தில் வைத்து அவற்றைப் பற்றி நீண்ட கட்டுரை வரையலாம். எனினும், அக்கருத்துக்களில் சிலவற்றைப் பின்னால் தருதும்.

பாம்பு எங்கே வசிக்கிறது? வறண்ட இடம், பாலை, பாழான வீடு, ஈசல் புற்று — இவைகளில் வசிக்கும், பாம்பு. மன்றம் சென்று ஒரு பக்கமாகச் சான்று சொன்னவனது மனை பாம்படையும் பாழ் வீடாகுமல்லவா? இதைக் கவிஞர் அழகிய பாடலில் வருணிக்கிறார்:

> 'வேதாளஞ் சேருமே வெள்ளெருக்கம் பூக்குமே
> பாதாள மூலி படருமே — மூதேவி
> சென்றிருந்து வாழ்வாளே சேடன் குடிபுகுமே
> மன்றோரஞ் சொன்னான் மனை"

சேடன்—ஆதிசேசன்—பாம்பு. ஆகவே, இப்பாடலிலிருந்து பாம்பு பாழடைந்த, குடியில்லாத வீட்டில் குடியிருக்கும் என்பது நமக்குப் புலனாகின்றது.

பாம்பு வறண்ட இடங்களிற் காணப்படும். அங்கு அதிகச் சூடாக இருக்கும். அச் சூட்டினால் பாம்பும் சோர்ந்து போகும்.

அவ்வாறு சோர்ந்து சுருங்கிக் கிடக்கும் பாம்பை, பையிலுள்ள பணத்தை எடுத்தவுடன் பை சுருங்குமல்லவா — அப் பைக்கு ஒப்பிட்டார் புலவர். பாலையில் வசிக்கும் பாம்பு பணம் நீக்கப் பட்ட பையைப் போலிராது வேறு எப்படியிருக்கும்? இதை,

"நிதியஞ் சொரிந்த நீவி போலப்
பாம்பூன் தேம்பும்". (அகம் 313) என்றார் கவிஞர்.

பாம்புகள் ஈசற் புற்றிலும் வசிப்பது பெரும்பாலர்க்குத் தெரிந்த உண்மை. பாம்பு வசிக்கும் ஈசற் புற்றை இரவிற் கரடி ஒன்று வந்து கூரிய நகமுடைய தன் கையை விட்டுத் துழாவும் போது, ஆங்கேயுள்ள பாம்பு, கரடியின் நகத்தால் காயமடைந்ததாம். இதைப் பெருங்குன்றூர் கிழார், அகநானூறு 8-வது பாட்டில் என்ன அழகாக எடுத்துரைக்கின்றார்!

"ஈயற் புற்றத்து ஈர்ப்புறத் திருத்த
குறும்பி வல்சிப் பெருங்கை ஏற்றை
தூங்குதோல் துதிய வள்ளுகிர் ததுவலின்
பாம்புமதன் அழியும் பானாட் கங்குல்"

ஆகவே பாம்பு ஈசற் புற்றில் வசிப்பது இப்பாட்டிலிருந்து நாம் அறியலாம்.

பாம்புகட்குக் கால்களுண்டா? இவ்வினாவுக்கு விடையிறுக்க வந்த புலவர் பாம்புகட்குக் காலில்லை என்பதை மறைமுகமாகச் சொல்லுகிறார் கீழ்வரும் பாட்டில்:

"புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம் — நலமிக்க
பூம்புன லூரபொ துமக்கட் காகாதே
பாம்பறியும் பாம்பின் கால்" —(பழமொழி)

பாம்பின் முன்சந்ததிகளுக்குக் கால்களிருந்தன. ஆனால் தற்போதுள்ள பாம்புகளுக்குக் கால்கள் கிடையா. ஆனாலும் மலைப் பாம்பு போன்றவைகட்கு, மலவாயிலின் இருபுறமும் நகங்களையுடைய முண்டுகள் காணப்படுகின்றன. இவைகளே அவற்றிற்குக் கால்களாகும். அம் முண்டுகளுங் கூடப் புலமைமிக்க விலங்கியல் வல்லுநர்க்கே புலனாகும்.

பாம்புகளின் முன் சந்ததிகள் சாதாரண வாழ்க்கையை

விட்டு, வளைகளுக்குள் வாழ்க்கை நடத்தச் சென்றவுடன் கால்கள் தேய்ந்தன. முடிவில் மறைந்தன. பாம்புகள் மட்டும் தங்கள் கால்களை இழக்கவில்லை; வளை வாழ்க்கைக்குச் சென்ற மற்ற பிராணிகளான பல்லியினங்கள், ஈரிடவாசிகளான தவளை யினத்தைச் சார்ந்த "இக்தியாவிஸ்" (ICHTHYOPHIS) போன்ற வைகளும் கால்களை இழந்தன. சாதாரண வாழ்க்கையை விட்டு இழிநிலைக்குச் சென்றால் உடல்நலம் கேடுறும்; உள்ளம்நலியுமென் பதற்குப் பாம்புகளின் கால்கள் நமக்கு எடுத்துக்காட்டாம் கால் களில்லாமையினால், வயிற்றிலுள்ள செதில்களினால் தரையைப் பற்றி ஊர்ந்து செல்லுகின்றன. அவ்வாறு பாம்பு ஊர்ந்து முன் னேக்கிச் செல்வதற்கு இரண்டு காரியங்கள் இன்றியமையாதன வாகும். அதன் உடம்பு அநேக வளைவுகளில் அமையவேண்டும். இரண்டாவது, அஃது ஊர்ந்துசெல்லும் தரை சொரசொரப்பாக இருக்கவேண்டும். ஏனெனில் அவைகளில் பாம்புகள் உடம்பை அழுத்தினால், அது உம்பி, உந்தித் தள்ளப்படும். இவ்வாறு வளைவு களாலான உடம்பையுடைய பாம்புகள் நெளிந்து செல்வதைப் புலவர்கள் கண்டறிந்துள்ளனர்.

> "நெடுந்தேர்
> நோன்கதிர் சுமந்த ஆழியாழ் மருங்கின்
> பாம்பென முடுகுநீர்" (அகம்: 339)

நெற்கதிர் சாய்ந்த பாதை நேராக இல்லை. அப் பாதையில் தேர் நேராகச் செல்ல முடியாது. ஆகையால், நெளிந்த பாதை யிற் சென்ற வண்டிச் சக்கரம் நெளிந்திருக்கிறது. அந் நெளிந்த வண்டிச் சுவட்டில் செல்லும் மழை நீரும், பாம்பு எவ்வாறு வளைந்துசெல்லுகிறதோ, அவ்வாறுசெல்லுகிறது. இங்குப் புலவர், நீர் வளைந்து செல்லுதலை, பாம்பு வளைந்து செல்லுவதற்கு ஒப் பிட்டுப் பாம்பின் இடம் பெயர்தல் முறையை விளக்குகிறார்.

பாம்பின் நாக்குப் பிளவுபட்டிருக்கும். இவ்வுண்மையைப் புலவர் பாம்புக்கும் எள்ளுக்கும் சிலேடை பாடும்போது அழகாக எடுத்துரைத்துள்ளார்.

> "ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேஇரையும்
> மூடித் திறக்கின் முகங்காட்டும்—ஓடிமண்டை
> பற்றிப் பரபரென்னும் பாரில்பிண் ணாக்குமுண்டாம்
> உற்றிடுபாம் பெள்ளெனவே ஓது"

பிண்ணுக்கு = எள்ளுப் பிண்ணுக்கு;
பிண்ணுக்கு = பிள் + நாக்கு = பிளவுபட்ட நாக்கு என்று பாம்பின் நாக்கைக் குறித்தார்.

மேற்குறித்த சிலேடையில் நல்ல பாம்பைப் பற்றிய இன்னொரு உண்மையும் பொதிந்துள்ளது. பாம்பு படமெடுத்து ஆடும்போது, அதன் உடலில் ஏற்படக்கூடிய மாறுதல்களை நன்கு கவனித்துள்ளார் கவிஞர். படம் எடுத்து பாம்பு ஆடும்போது சீறும். அதனுற்ருன் ஆடும்போதே இரையும் என்ருர். சீறுதல் என்பது நெட்டுயிர்த்தல் என்பது பொருள் அதாவது, அதிகமான காற்றை ஒரு சிறிய துவாரத்தின் வழியே வெளிப்படுத்துவதாலுண்டாகிறது. ஆகவே, சீறுவதற்குக் காற்று அதிகம் வேண்டும் அதிகமான காற்றை உட்கொள்ளும் போதும், வெளிவிடும்போதும் இரைச்சல் உண்டு. குறிப்பாக, விரியன் பாம்பின் பக்கத்தில் யாராவது சென்ருல் உடனே எச்சரிக்கும் வண்ணம் பேரிரைச்சலிடும். அந்தப் பயங்கரமான இரைச்சலை ஒரு முறை கேட்டவர்கள் மறக்கவே மாட்டார்கள்.

பின்பு, பாம்புக்கும் எலுமிச்சம் பழத்திற்கும் உள்ள சிலேடையை உற்று நோக்குவோம்:—

"பெரியவிட மேசேரும் பித்தர்முடி மேலேறும்
அரியுண்ணும் உப்புமேலாடு"

"அரியுண்ணும்" என்ற பதங்கள் பாம்பு ஆடும்போது காற்றையுட்கொள்ளுதலைக் குறிக்கும். அரி = காற்று. பாம்பு காற்றை உட்கொள்ளும்பொழுது உடல் பெருக்கும். அதைத்தான் புலவர், அரியுண்ணும்உப்புமேலாடும் (உப்பும் + மேலாடும்) என்ருர். அதாவது, ஆடும்போதும், சீறும்போதும் காற்று உட்கொள்ளுவதால் உடம்பு பெருக்கும் என்ருர். இவ்வுண்மை நாகப்பாம்பு ஆடும்போது உற்று நோக்கியவர்க்கே தெரிய வரும். தமிழ் மக்களின் கூர்ந்து நோக்கும் கூர்த்த மதியினை எவ்வாறு புகழ்வது!

சில சமயங்களில் பாம்புகள் ஒன்ருேடொன்று பின்னிப் பிணைந்திருப்பதைச் சிலர் பார்த்திருக்கலாம். இது கலவியான்று. இதனைப்பாம்புகளின் விளையாட்டு அல்லது ஆட்டம் எனலாம். பன்னகங்கள் இவ்வாறு பின்னியிருத்தல் இரண்டு, மூன்று மணி

நேரம் நீடிக்கலாம். அண்மையில் ஹாரிமில்லா என்ற உயிர் நூல் விற்பன்னர், இரு சாரைப் பாம்புகள் இரண்டு மணி வரையிலும் பின்னியிருந்தனவாக இந்தியன்எக்ஸ்பிரசில் சிலஆண்டுகட்கு முன் எழுதியுள்ளார். சில சமயங்களில், சாரையும் நாகமும் இவ்வாறு பின்னியிருத்தலைக் கண்டவர்கள் சாரையைப் பெண்ணென்றும்' நாகத்தை ஆணென்றும்கூறுகிறூர்கள். இது தவருனகருத்தாகும். சாரையிலும் ஆண், பெண் உண்டு. அதுபோல், நாகத்திலும் ஆண், பெண் உண்டு. பாம்புகள் ஒன்ருே டொன்று பின்னியிருத்தலை இளங்கோவடிகள், இரதியும் மன்மதனும் போல் இணைபிரியாது இல்லறத்தில் ஈடுபட்டு இருந்தமைக்கு உவமையாக்கி உரைத்துள்ளார்.

" தூமப் பணிகளொன்றித் தோய்ந்தாலென்ன வெருவார்
காமர் மணிவியெனக் கைகலந்து — நாமந்
தொலையாத இன்பமெலாந் துன்னினூர்"

என்று சிலப்பதிகாரத்தில் மணையறம் படுத்த காதையில் ஒரு சொல்லோவியமாகப் பொறித்தார் அச் சொல்லேருழவர்.

நாகம்பலவகைப்பட்டது.கருநாகம், அல்லதுகம்பரிசிநாகம் அவைகளில்ஒன்று. நச்சுக்கண்நாகம்அல்லது திட்டிவிடம்என்பது ஒன்றுண்டு. இந்நாகம் பிற நாகங்களைப் போல், நஞ்சினை நஞ்சுப் பையில் அடக்காது கண்ணில் அடக்கிய காரணத்தால்திட்டிவிடம் எனப் பெயர் பெறுவதாயிற்று. அப் பாம்பின் கண்ணெதிர்பட்டோர் இறப்பது ஒருதலை என்று பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன.

கம்பர் சீதையைத் திட்டிவிடத்திற்கு ஒப்பிடுகிறூர். கற்பினுக் கணியாய சீதை மீது காதல்கொண்ட இலங்கை மன்னன் இராவணன் அந்நங்கையின் கற்புத்தழலால் அழிவுறுவது திண்ணம் எனவுணர்த்த, கும்பகர்ணன் தவறிழைத்த தன் தமையனை நோக்கி,

"திட்டிவிட மன்ன கற்பின் செல்வியை
விட்டிலேயோ இது விதியின் வன்மையே"

என்று இரங்கிக் கூறுகிறுன்.

பின்னும் மண்டோதரி, இறந்துபட்ட இந்திரசித்தனை நோக்கி,

"அஞ்சினேன் அஞ்சினேனிச் சிதையென் றமிர்தாற்செய்த
நஞ்சினுல் இலங்கை வேந்தன் நாளையித் தகையனன்றே'
என்று புலம்புகிருள்.

இப்போது நஞ்சைக் கண்ணிலடக்கிய நாகம் உண்டா உயிர் நூலில் இவ்வகையான நாகம் இருந்ததாகத் தெரியவில்லை உயிர்நூல்வல்லார் அறிந்த வரையில் நாகங்கள் தங்கள்நஞ்சைநச் சுப் பையில்தான் வைத்துள்ளன. ஆனுல் ஆப்பிரிக்காவில்துப்பும் நாகங்கள் (Spitting Cobras) என்பன உண்டு. அவைகளில் ஒன்று ஹிமகிடஸ் (Haemachetes Haemachetes). யாராவது அந்நாகத் தின் அருகில்வந்தால், அதுதன் நச்சுப்பையிலுள்ள நஞ்சை நஞ்சுப் பல்லின் வழியே வரச் செய்து, அதனைத்தன் ஒன்னுர் கண்ணிற்' படும்படி குறி தவருது தெளித்து விடுகிறது. நஞ்சு கண்ணிற் பட்டவுடன் எரிச்சலுண்டாகும். சிலசமயங்களில் கண் முழுவதும் குருடாகவும் ஆகிவிடும். இப்பாம்புகள் நம் நாட்டிலும் இருந் திருக்கலாம். ஏனெனில், நாகப்பாம்பினம் ஆப்பிரிக்காவிலும், தென் கிழக்கு ஆசியாவிலும் காணப்படுவன. அதோடு, ஆப் பிரிக்காவையும், இந்தியாவையும், நன்னிலப் பகுதி இணைத் திருந்ததென்பதற்குப் பல சான்றுகள் உள. ஆகவே, துப்பும். பாம்புகள் இந்தியாவிலும் இருந்திருக்க வேண்டும் என்னும் கொள்கை, பகுத்தறிவுக்கும் விஞ்ஞானச் சான்றுகளுக்கும் பொருந்தும். ஆனுல், இந்தியாவில் அது மறைந்தது; ஆப்பிரிக்கா வில் இன்றும் வாழ்கிறது. கம்பர் இப்படிப்பட்ட நாகத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்க வேண்டும். புலவர்கள் சில சமயங் களிலே சிறிய காரியங்களையும் மிகைப்படுத்தியோ, திரித்தோ கூறுவதும் உண்டு.

பாம்புகளில் இனப்பெருக்க முறைப்படி இருவிதமாகப் பிரிக்கலாம். (1) முட்டையிட்டு அடைகாப்பன. (2) முட்டை யிடாது பாம்புக் குட்டிகளை ஈனுவன. முதல் வகைப் பாம்புகள் அதிகம். அவை நாகப் பாம்பு, சாரைப் பாம்பு முதலியன. குட்டிகளை ஈனும் பாம்புகள் கண்ணுடி விரியன், மரங்களில் வசிக் கும் பாம்புகள், கடற் பாம்புகள் போன்றன. மரங்களில் வசிக்கும் பாமபுகளில் பச்சைப் பாம்பு ஒன்று அது சூல் கொண்டு குட்டி களை ஈனக் கூடியது. அதைச் சிந்தாமணி ஆசிரியர் உற்றுநோக்கி வருணித்துள்ளார்:

"சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று மேலல்லார்
செல்வமே போல"

ஈண்டுக் கக்கலும் விக்கலுமான நிலையிலுள்ள நெற்பயிரைச் சூல் கொண்ட பச்சைப்பாம்புக்கு ஒப்பிட்டுள்ளார். இறுதியில் எவ்வாறு பாம்பு, குட்டிகளை ஈனுகிறதோ, அவ்வாறே தானிய மணிகளையுடைய கதிர்களை, நெற்பயிர் வெளியே தள்ளுகிறது. இவ்வாறு முட்டையிடாமல் குட்டிகளை ஈனக்கூடிய வழக்கம், மரங்களில் வசிக்கும் பாம்புகளுக்கும், கடற் பாம்புகளுக்குமே உண்டு. புலவரின் ஆராய்ச்சித் திறன் என்னே!

பன்னகத்தோலின் மீதுள்ள வண்ணங்களையும், அவற்றின் ஒழுங்குகளையும் பற்றிச் சிறிது எண்ணுவோம். சுருட்டைப் பாம்பின் (Echis Carinatus) தோலின் அடிப்படை—சாணி நிறத்தில்; டயமண்ட் உருவம்—பார்ப்பதற்கு எவ்வளவு அழகு! நமது வயல்களிலே, ஒன்று கறுப்புநிறம், ஆனால்வயிற்றுப்பாகம் மட்டும் மஞ்சள் அல்லது வெள்ளை நிறம். இந்த வெள்ளை அல்லது மஞ்சள் நிற வயிற்றுப் பட்டையின் இரு பக்கமும் பாகத்திற்கொன்றாக ஒரு குறுகிய அகலமுடைய சிவப்புக் கோடு உண்டு. இன்னொரு தண்ணீர்ப் பாம்பின் தோலில், பெண்கள் கோலம் போட்டாற் போலப் பலவித உருவங்களைப் பார்க்கலாம். இவற்றையெல்லாம் சங்க காலத்துப் புலவர்கள் உற்று நோக்கினார்கள் என்பதற்கு இரண்டொரு சான்று தருதும். கரிகால் பெருவளத்தானிடம் ஒரு புலவர் சென்றார். அப் புரவலன், தன்னைப் புகழ்ந்து பாடிய புலவருக்கு அநேக பரிசில்களையும், பூத்தொழில் நிறைந்த நல்லதொரு அறுவையும் (ஆடை) நல்கினான். அதை அப்புலவர் இன்னொரு புலவரை ஆற்றுப்படுத்தும் பொழுது,

"நோக்க நுழைதல் நுண்மையைப் பூக்கனிந்து
அரவுரியன்ன அறுவை நல்கி"

என்று கரிகாலன், தமக்களித்த ஆடை, பாம்பின் தோலைப்போன்றது என்கிறார். இதே கருத்தைப் புறம் 383—வது பாட்டிலும் காணலாம்;

"பாம்புரி அன்ன வடிவின காப்பின்
கழைபடு சொலியின் இழையணி வாரா
ஒண்பூங் கலிங்கம்"

எந்தப் பாம்பு தோலுரிப்பினும் உரிக்கப்பட்ட தோல் வெள்ளை நிறமாகத் தான் இருக்கும். அது கண்ணாடிபோல் வெள்ளையாக இருக்கும். பதினைந்து அடி நீளமுள்ள அரச நாகமானாலுங் கூடத் தோலுரிக்குமாயின், அதன் நிறம் வெள்ளையாகவே இருக்கும். இதை,

"பாம்பின் தூங்கு தோல் கடுக்கும் தூவெள்ளருவி"

என்று ஒரு புலவர் குறுந்தொகையில் 236-ஆம் பாட்டில் அழகாக வருணிக்கிறார். மலையினின்று விழும் தூய நீரருவி பாம்பின் தோலைப் போல் தூய வெள்ளையின் நிறமாக உள்ளது எனப் பொருள்படும்.

பாம்புகளின் விடத்தை இருவகையாகப் பிரிப்பார்கள். ஒன்று நாகம்முதலியவற்றின் நச்சை நரம்புநச்சு(Nauretoxin) என்றும், விரியன் நஞ்சை, இரத்த நஞ்சு (Haemotoxin) என்றும்கூறுவார்கள். ஏனெனில், முன்னையது நரம்புத் தொகுதிகளான மூளை, அதோடுஇணைக்கப்பட்டிருக்கும்நரம்புத்தண்டு ஆகியயஅணைத்தையும் பாதிக்கக்கூடியது. ஒருவனை நாகம் தீண்டியவுடன் நஞ்சுஇரத்தத்தில் கலந்து மூளைக்குச்செல்லுகிறது. உடனேமூளையும்நரம்பும் பாதிக்கப்படுகின்றன; அவன் சோர்ந்துவீழ்கின்றான். இதைத் தான்,

"எரிவிட முறையே யேறித் தலைக்கொண்ட ஏழாம்வேகம்
தெளிவுற வெயிறுங்கண்ணும் மேனியும் கருகித்தீந்து
விரியுரை குழறிஆவி விடக்கொண்டு மயங்கி வீழ்வான்"

எனச் சேக்கிழார் விரித்துரைக்கிறார்.

இதே கருத்தைத்தான் பாம்புக்கும் எள்ளுக்கும் சிலேடை பாடிய புலவர் ஒருவர்,

"ஓடி மண்டை
பற்றில் பரபரெனும் பாரிற்பிண்ணாக்கு முண்டாம்"

என்றுரைத்தார்.

பாம்புக்கும் எலுமிச்சம்பழத்துக்கும் சிலேடை படைத்த டலவரும் மேலுரைத்த கருத்தைத் தெரிவிக்கிறார்.

"பெரியவிடமே சேரும், பித்தர் முடியேறும்."

பெரியவிடம்= கொடிய நஞ்சு

பெரிய+இடம் = பெரியவர்கள் கையில் எலுமிச்சம்பழம் கொடுக்கப்படும்.

பித்தர்=சிவன்

பித்தர்=பாம்பு கடித்தவன் தன் புத்தியிழக்கிறுன்.

பாம்புகளைப் பற்களின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு மூன்று வகைகளாகப் பிரிப்பார்கள். சிலவற்றின் பற்களில் துவாரம் கிடையாது. இவற்றைப் (Aglypha) பற்றுவாரமில்லாதவை என்பர். சுவர் பாம்புகளை இவற்றிற்கு உதாரணங்களாகக் கூறலாம். சில பாம்புகளுக்குக் கடைவாய்ப் பற்களில் மாத்திரம் துவாரம்உண்டு. இவற்றிற்குப் பச்சைப்பாம்பு அல்லது கண்கொத்திப்பாம்புகளைக்கூறலாம். ஆகையால்,இவற்றைக்கடைவாய்ப் பற்றுவாரம் உடையன (Cephisthoglypha) என்பார்கள். நாகம், விரியன் இவற்றின் முன் வாய்ப் பற்களில் துவாரம்உண்டு. நாகத்தின்முன்வாய்ப்பல்லின் முன்பாகத்தில், விடம் பாய்வதற்கு சாலகம் போல ஒரு கால்வாய் உண்டு. இந் நுண்கால்வாய் வழியாக நஞ்சு, பிற பிராணிகளின் செந்நீரில் பாயும். நாகத்தின் இப் பற்களை நம் புலவர்கள் தண்ணீரில் விழும் தூம்புக்கு ஒப்பிட்டுள்ளனர். ஒரு சில தூம்புகள் குழாய் போலிருக்கும். சில தூம்புகள் திறந்திருக்கும். பின் சொல்லிய தூம்புக்குத்தான் நாகப் பல்லை ஒப்பிட்டுள்ளனர். இதை நக்கீரர் திருமுருகாற்றுப் படையில்,

" கருவோடுடங்கிய தூம்புடை வால்எயிறு" — என்று உரைக்கின்றுர். ஈண்டு, அப்பல்லின் நிறத்தை, வெள்ளை (வால்–வெள்ளை) என்று வர்ணிக்கிறுர். புலவர்களின் உற்று நோக்கும் தன்மை கற்றறிந்தோர் ஏத்திப் போற்றுதற்குரியதல்லவா!

ஈண்டுப் பாம்புகளைப் பற்றிய இரு தப்பு எண்ணங்களைப் பற்றிச் சிறிது எண்ணுவோம். இவை சங்க நூல்களிற் காணப் படுவனவல்ல. பாம்புகளின் "நாகமணி" பற்றிப் பிற்காலக் கவிஞர்கள் பாடியுள்ளார்கள். நாகத்துக்கு ஒளிவீசும் மணி கிடையாது. "நாகமணி" என்பது நன்கு உய்த்தறியாது. கற்பனையுலகிலும், கவியுலகிலும் களிக்கும் கவிஞனின் சிந்தனையில்லாச் சிற்பம் வேறன்று.

பாம்புகளைக் "கட்செவி" என்று பாவலர் அழைப்பார்கள் அதைப் பின்வரும் செய்யுளில் காணலாம்.

"கடவுளவிர்சடைமேற் கட்செவியு ஞ்சாதே
படர்சிறைப் புள்ளரசைப் பார்த்து"

என்ற பாட்டினால் இதை அறியலாம். ஒரு வேளை பாம்பின் காதுத் துவாரத்தைப் பார்க்க முடியாதபடியால் (அவைகளுக்குக் காதுத் துவாரம், செவிப்பறை, நடுக்காதையும், தொண்டையையும இணைக்கும் "யூஸ்டக்கியின்" குழாய்கள் ஆகிய இவை மூன்றும் பாம்புக்கு இல்லை) அப்படிப் பாடியிருக்கலாம். எனினும் பாம்புகள் எப்படிக் கேட்கின்றன வென்பதைப் பற்றிய ஆராய்ச்சிகளைப் பற்றி உரைத்தால் அவை விரியும்.

—[:-:]—

# ஒரு குறள் உவமை ஆய்வு

புலவர். சி. சத்தியமூர்த்தி B. O. L. (M. A.)
(தமிழாராய்ச்சித் துறை, கேரளப் பல்கலைக்கழகம்)

உலகிலுள்ள கலைஞர்கள் அனைவரும் வானின் கலைவிளையாடல்களைக்கண்டு களித்திருக்கின்றனர். செங்கதிரும் திங்களும் விண்மீன்களும் முகிற்கூட்டங்களும் கலைஞர்களின் உள்ளங்களைக் கவர்ந்திருக்கின்றன. தமிழகத்தின் தலைமைக் கலைஞராகிய திருவள்ளுவர் 'வான்சிறப்பு'ப் பாடினார். காயும்வெய்யிலும் (குறள்: 77), மதிக்கண் மறுவும் (குறள்: 957) அவர் கண்ணிலிருந்து தப்பவில்லை. விண்மீன்களை (குறள்: 1116) அவர் அண்ணாந்து நோக்கினார். அவை விட்டுவிட்டு ஒளிவீசிக்கொண்டிருந்தன. அக்காட்சி, மாதர் முகத்திற்கும் மதிக்கும் வேறுபாடு கண்டறியமுடியாமல் அவை கலங்குவனபோன்று அவருக்குப் பட்டது.

இவ்வாறெல்லாம் வானையும் அதனில் வந்து போவது போன்று நமக்குத் தென்படும் இயற்கை எழில்களையும் பாடிய திருவள்ளுவர், வானில் இடம் பெறும் நிகழ்ச்சிஒன்றனையும்பாடிச் செல்கிறார். அது பின்வருமாறு:—

"கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று" (குறள்–1146)

தலைவி கூற்றாக வள்ளுவர் கூறும் இக் குறளின் கருத்து வருமாறு:- "காதலரைக் கண்டது ஒருநாள்தான்; அதனால் உண்டாகிய அலரோ, திங்களைப் பாம்புகொண்ட செய்திபோல் எங்கும் பரந்துவிட்டது".

இலக்கிய நோக்குடன் இக்குறட்பாவைக் காண்போருக்குத் திருவள்ளுவர் கூறிய உவமைப் பொருத்தம் இன்புறத்தக்கதாய் அமைந்துகிடக்கிறது. களவுக் காலத்தில் 'இடையீடு'களாலும் 'அல்லகுறி'யாலும் தலைவனும் தலைவியும் அடிக்கடி சந்திக்க வாய்ப்பு ஏற்படுவதில்லை. என்றோ ஒருநாள்தான் அவர்கள் சந்திப்பர். என்றோ ஒருநாள்தான் திங்கள் பற்றுகை (சந்திரகிரகணம்) ஏற்படுகிறது. பாம்பு திங்களை விழுங்கி உண்பதனைப்போல் தலைவ

னும் தலைவியின் பெண்மை நலம் உண்பான். சந்திக்கும் 'குறியிடம்' பற்றித் தலைவனும் தலைவியும் அல்லாமல் தோழியும் தெரிந்துவைத்திருந்தாள். அதுபோன்று திங்கள் பற்றுகை ஏற்படும் நாளை அக்காலத்தினர் கணிதம் மூலம் அதுநிகழும் முன்னரே அறிந்துவைத்திருந்தனர். கணியன் பூங்குன்றனார் போன்ற பழந்தமிழகத்துக் கணியர்கள் திங்கள் பற்றுகைபற்றிய செய்தியை மக்களுக்கு முன்கூட்டியே தெரிவித்திருப்பர் என்று திண்ணமாகக் கூறலாம். தலைவன் தலைவி சந்திப்புப்பற்றி ஊராரிடம் அலர் எழுகிறது; அதுபோன்று திங்கள் பற்றுகை ஏற்படுவதுபற்றி இரண்டாயிரம் ஆண்டுகட்கு முந்திய பழந்தமிழர்கள் நடுவிலும் உரையாடல்கள் நிலவியிருக்கின்றன. அலருக்குத் திங்கள் பற்றுகைச் செய்தியை உவமையாகத் திருவள்ளுவர் கூறுவதிலிருந்து இவற்றை உணரலாம்.

இனி அறிவியற் கண்ணோட்டத்துடன் இக்குறளை அணுகுவோம். மேற்காணும் குறட்பாவில் திங்கள் பற்றுகை (Lunar Eclipse) கூறப்பட்டிருக்கிறது. இக்குறளைப் படித்த நானும் என் நண்பர்களும் திருவள்ளுவரும் மூட நம்பிக்கைக்குள் அகப்பட்டுக் கொண்டவர்தான் என்று எண்ணியதுண்டு. ஆனால் பின்னர்த் திருவள்ளுவரது சொற்பொருள்கண்டு தெளிவுபெற்று நம் அறியாமைக்கு நாமே நாணினோம்.

திங்களைப் பாம்பு கவ்வுவதால்தான் திங்கள் பற்றுகை ஏற்படுகிறது என்ற நம்பிக்கை வழிவழியாக நம்மிடையே நிலவி வருகிறது. இது புராண வரலாறு என்பார், மண்ணின் மேல் நெளியும் பாம்பு விண்ணிலிருக்கும் திங்களை எவ்வாறு விழுங்கும் என்று கேள்விக்கணை தொடுப்பர். அவர்கள் "வானத்து அரவு" (சிலம்பு 5 : 206, 7 : 11) என்று இளங்கோவடிகள் பாடுவதை அறியார். அடிகளின் கூற்றுப்படி வானில் உள்ள ஒரு பொருள் தான் வடிவொற்றுமையற்ற அரவாக உருவகிக்கப்பட்டிருக்கிறது என்பதை உணரலாம். சங்ககாலத் தமிழர் ஆடு, முடப்பனை, குளம் ஆகியவற்றின் வடிவில் விண்மீன் கூட்டத்தையும் நாள்களையும் கண்டிருக்கின்றனர் என்பது கீழ்க்காணும் பாடலால் தெளிவாகும்.

"ஆடியல் அழற்குட்டத்து
ஆரிருள் அரையிரவின்

முடப்பனையத்து வேர்முதலாக்
கடைக்குளத்துக் கயங்காய...'' (புறம் 229)

மேனுட்டாரும் நம்மைப் போலவே விண்மீன் கூட்டங்களுக்குப்பெயரிடும்போது ஊர்வன, நீந்துவன, நடப்பன ஆகியவற்றின் வடிவொற்றுமை பற்றி அவைகட்கு நண்டு (Cancer), தேள் (Scorpio) என்றும், மீன் ((Pisces) என்றும், அரிமா (Leo), ஆடு (Aries), மாடு (Taurus) என்றும் பெயரிட்டுள்ளனர்.

அடுத்துத் திருவள்ளுவர் 'பாம்பு' என்ற சொல்லை எந்தப் பொருளில் பயன்படுத்தியிருக்கிறார் என்பதை நாம் உணர வேண்டும். நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தரின் பின்வரும் தேவாரம் வள்ளுவர் குறட்பாவுக்கு ஓர் உரை போன்று அமைகின்றது:

''வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனுன்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே'' (கோளறு பதிகம்: 1)

இத்தேவாரத்தில் வரும் ''பாம்பு இரண்டு'' என்ற சொற்கள் வள்ளுவரின் குறட்பாவுக்குத் தக்க விளக்கம் அளிக்கின்றன. திருவள்ளுவர் ''பாம்பு'' என்று சுட்டுவதைத்தான் திருஞான சம்பந்தர் ''பாம்பு இரண்டு'' என்று பாடுகிறார். இத் தேவாரத்தில் ஒன்பது கோள்களுள் ''பாம்பு இரண்டு'' கூறப்பட்டிருப்பதால் அவைகளும் கோள்களே என்பது உணரப்படுகிறது. எனவே, திருவள்ளுவர் இக்குறட்பாவில் பாடிய 'பாம்பு' என்ற சொல் ஒரு கோளையே உணர்த்தும் என்பதைத் திருஞான சம்பந்தர் தேவாரம் நமக்குத் தெளிவாகத் தெரிவிக்கின்றது. இதிலிருந்து திங்கட்கோளைப் பாம்புக்கோள் மறைப்ப ஏற்படுவது திங்கள் பற்றுகை என்பதைத்தான் தம் குறட்பாவில் வள்ளுவர் சுட்டுகிறார் என்பது தெளிவாகி விட்டது.

''பாம்பு இரண்டு'' என்று திருஞான சம்பந்தர் குறிப்பிடுவது கரும்பாம்பு செம்பாம்பு ஆகியவற்றையே.

"இராகுக் கோள் கரும்பாம்பு"
"கேதுக் கோள் செம்பாம்பு" (சேந்தன் திவாகரம்)

கரும்பாம்பு, செம்பாம்பு ஆகியவற்றையே வடநூலார் இராகு கேது என்பர். 'பாம்பு இரண்டு' என்று திருஞானசம்பந்தர் கூறுவது பிற்கால வழக்குப் பற்றியதாகும். பழைய நூல்கள், இக்காலத்தில் கரும்பாம்பு என்று குறிப்பதைக் கரும்பாம்பின் தலை என்றும், செம்பாம்பு என்று குறிப்பதைக் கரும்பாம்பின் வால் என்றும் கூறும். கரும்பாம்பின் வாலைச் செம்பாம்பு என்று கூறும் வழக்கம் மிகப் பிற்காலத்தில் வந்தது. (கலைக் களஞ்சியம் தொகுதி 6 பக்கம் 309). வள்ளுவர் வாழ்ந்த பழங்காலத்தில் கரும்பாம்பு செம்பாம்பு என்ற இரண்டும் கரும்பாம்பு என்றே அழைக்கப்பட்டிருக்கலாம். எனவே கரும்பாம்பு என்ற வழக்குப் பற்றித்தான் திருவள்ளுவர் வறிதே 'பாம்பு' என்று கூறினர் என்பதைப் பின்வரும் பரிதியார் உரை தெரிவிக்கிறது.

"ஒருநாள் நாயகரிடத்தில் இன்பங்கண்டது; அது — சந்திரனை
இராகு தீண்டினதற்கு ஒக்கும்"

பாம்பின் வடிவொற்றுமை பற்றிக் கோளுக்குப் பாம்பு என்று பெயரிட்டனர் என்பதைக் கட்டுரையின் தொடக்கத்தில் கண்டோம். மேனாட்டாரும் கரும்பாம்பு, செம்பாம்பு என்று தமிழர் குறித்தவற்றை முறையே Caput Draconis என்றும் Cauda Draconis என்றும் அழைத்தனர். Draconis என்ற இலத்தீன் சொல் (Draconis> Dragon) பாம்பினை உணர்த்தும். எனவே மேனாட்டாரும் பாம்பின் வடிவிலேயே இரு கோள்களையும் கண்டனர் என்பது தெளிவு. பழங்கால நூல்கள் கரும்பாம்பின் தலை என்றும் கரும்பாம்பின் வால் என்றும் கூறுவதை முன்னர்க் கண்டோம். அதைப் போன்று மேனாட்டினரும் தலைப்பாம்பு (Caput : Head) என்றும் வால் பாம்பு (Cauda : Tail) என்றும் அழைத்தனர் என்பதும் நினைக்கத்தக்கது.

தமிழ்நாட்டுக் கோயில்களில் காணப்படும் ஒன்பது கோள்களின் அமைப்பு வானவியலை விளக்கும் ஒரு மாதிரிப் படிமமாகும். (Model). கரும்பாம்பு செம்பாம்பு ஆகியவைகள், மற்றைய ஏழு கோள்களைப் போன்ற தனிநிலை உடையனவல்ல எனத்தெரிந்தே, திங்கட்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை இறுதியாகப் பிறகோள்களுக்குரிய நாட்களை வகுத்ததுபோல, அவை இரண்டிற்கும் உரி

யனவாக நாட்களை நாம் வகுக்கவில்லை. இன்னும் அவை இரண்டும் ஒன்பது கோள்களின் இறுதியில் சேர்க்கப்பட்டிருப்பதும் உற்று நோக்கத்தக்கது. இக்கோள்களை வட நூலார் முறைப்படி கோள்களல்ல என்ற பொருளில் நிழற்கோள்கள் (சாயாக் கிரகம்) என வழங்கிவருவதும் காண்க.

"சூர்யனுக்கு (௧௬,000) விஸ்தார யோசனையுள்ள மண்டலத்திலிருப்பவர்கள்... இந்த இராகு கேதுக்கள் முறைப்படி கிரகங்களல்ல. இந்துக்கள் இவற்றைச் சாயாகிரகம் என்பர். ஆயினும் இவை சூரியனை ஒருமுறை சுற்றிவர(182) வருஷங்கள் ஆகின்றன என்பர்''
— அபிதான சிந்தாமணி (பக்கம்: 178)

ஞாயிற்றுக்கும் திங்களுக்கும் இடையில் நிலவுருண்டை வரும்போது, ஞாயிற்றின் ஒளி திங்களில் படுவதை நிலவுருண்டை மறைத்துவிடுகிறது. அப்பொழுது திங்களில் நிலவுருண்டையின் நிழல் விழும். இதைத்தான் திங்கள் பற்றுகை என்று வானவியல் கூறும். நிலவுருண்டையின் நிழல், திங்களை முதலில் மெல்ல மறைப்பதும், பின் அந்நிழல் பையப்பைய நீங்குவதும் பாம்பொன்று திங்களை விழுங்குவதுபோலவும் பின்னர் உமிழ்வது போலவும் காட்சி அளிக்கும்.

" இராகுவின் சிரம் புச்சம் ஆகியவை சந்திரவீதியும் சூரியவீதியும் சந்திக்கும் பாதங்கள் எனப்பட்ட இரு தானங்கள்தாம் என்று வானவியல் கூறும் ''
— கலைக்களஞ்சியம், தொகுதி 6 பக்கம் 309.

திருவள்ளுவர் பாடிய திங்களைப் பாம்புகொண்ட செய்தி வானவியல் உண்மையின்பாற்பட்டதாகும். திங்கள் பற்றுகை பற்றிப் பாற்கடல் கடைந்த வரலாற்றொடு தொடர்புபடுத்திக் கூறப்பட்ட உருவகக் கதை, காலப் போக்கில் பொதுமக்களிடமிருந்த வானவியல் உண்மையை மறைத்து மூட நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டது. எனினும், எதிலும் உண்மை காணும் இயல்புள்ளவர்கள் இதற்குப் பலியாகிவிடவில்லை. தமிழ் இலக்கிய ஆர்வம் மிக்க வானவியல் வல்லுநர்கள் இத்துறையில் புகுந்து உழைத்தால் உருவகமாகக் கூறப்பட்டு மூட நம்பிக்கையாக மாறி மூழ்கடிக்கப்பட்ட பல அறிவியல் உண்மைகளை வெளிக்கொணரலாம்.

——○——

# உத்தர காண்டமும் ஒட்டக்கூத்தரும்

மு. அருணாசலம், எம். ஏ.,
திருச்சிற்றம்பலம்.

பழமையாக வந்த கருத்து, இராமாயண உத்தரகாண்டம் ஒட்டக்கூத்தர் பாடியது என்பது. ஏழு காண்டங்களையும் முதல் முதலாக நன்முறையில் இரண்டு தொகுதிகளாக நல்ல எழுத்தி லும் நல்லகாகிதத்திலும் அச்சிட்ட க. இராமரத்தினம்ஐயர் (1926) பாடல் 17ஆகவும், பாடல்1510ஆகவும், (இங்கு 'வெள்ளியங்கிரியை' என்ற கடவுள் வணக்கப்பாடல் கணக்கிடப்படவில்லை; இதையும் சேர்த்தால் 1511 ஆகும்) கணக்கிட்டார். முதல் ஆறு காண்டங் களைக் கவிச் சக்கரவர்த்தி கம்ப நாட்டாழ்வார் செய்தது என்ற தலைப்புக்கொடுத்து, உத்தர காண்டத்துக்குப் பின்வருமாறு தலைப்புக்கொடுத்திருக்கிறார்: "மகா கவி ஒட்டக்கூத்தர் செய் தருளிய இராமாயண உத்தர காண்டம்". ஆனால் நூலின் முதற் பக்கத்தில், "ஸ்ரீமத்கம்பராமாயணம் ஏழாவது உத்தரகாண்டம் என்பது தலைப்பாயுள்ளது. கம்பராமாயணம் ஏழுகாண்டம் என்றே வழங்குவது, ஆனால் ஏழாங்காண்டம் கம்பர் பாடவில்லை, ஒட்டக்கூத்தர் பாடினார் என்பதே இவர் கருத்தாதலை இவ்வாறு குறிப்பிட்டார். இதுவே நெடுங்காலமாய் வழங்கிய பொதுவான கருத்துமாகும்.

உத்தரகாண்டம் கம்பர் பாடவில்லை என்பதை, அரசகேசரி தாம் எழுதிய இரகுவம்சம் என்னும் காவியத்தில்,

"பொற்றூ மரைமா னுறையாது பொலியு மார்ப
எற்றாங்கு மேனி ரகுராம சரிதை யாவும்
கற்றார் கவியிற் பெரிதாந் தமிழ்க்கம்ப நாடன்
உற்றாங் குரைத்தான் உரையாதன ஒதுகிற் பாம்.",

என்னும் பாடலால், 'கம்பர் உரைக்காத பாகமாகிய உத்தர காண்டப் பாகத்தை மட்டும் இங்குக் கூறுகின்றேன்' என்றார். இதனால் அரசகேசரியார் கருத்தின்படி உத்தரகாண்டம் பாடிய வர் கம்பரல்லர் என்பது தெளிவாகும். 1904ஆம் ஆண்டு செந்

தமிழ்ப் பத்திரிகையில் (தொகுதி 3, பக்கம் 43) அதன் ஆசிரியரான மகாவித்துவான் ரா. இராகவையங்காரவர்கள் இதைநன்கு தெளிவுபடுத்திப் பின்வருமாறு எழுதுகிருர். "கம்பர் பாடியது பாலகாண்டம் முதல் யுத்த காண்டம் வரையுள்ள ஆறு காண்டங்களே என்பதும், பின்வந்த காண்டத்தை ஒட்டக்கூத்தர் பாடினரென்பதும், அவ்வுத்தர காண்டம் சோழனது அவைக்களத்தே அரங்கேற்றப்பட்டதென்பதும்,

"பூணிலாவுங் கம்பனலம் பொலியுந் தமிழாற் புகழெய்திக்
காணுமாறு காண்டமுறுங் காதையிற்பெரிய கதையென்னும்
தாணிலாவுங் கழலபயன் சபையிற் பயிலுத் தரகாண்டம்
வாணிதாச ரரங்கேற்ற வைத்தார் சோழ மண்டலமே"

என்ற சோழமண்டல சதகத்துப் பாடலால் (80) தெளிவாகின்றன. ஈண்டு, அபயன் என்பது சோழன் என்னும் பொருளில் வந்தது. ஒட்டக்கூத்தர், சரசுவதிதம்பலம்கொடுக்க அதனுல்கவித்திறம் எய்தியவராதலால், அவரை வாணிதாசன் எனப்பெயர் சிறப்பித்து வழங்குவரெனத் தெரியலாகும்."

அதே செந்தமிழ்த் தொகுதியில் (பக்கம் 9) வாணியின் தாசனுக்கும் கம்பருக்கும் இருந்த நட்புப் பகைமைகளைப் பற்றி மகாவித்துவான் விரிவாக எழுதியிருக்கிருர். அவருடைய கருத்து' வாணியன் தாதன் வேறு, அவன் செக்கார் மரபைச் சேர்ந்தவன். ஆனல் வாணிதாசன் என்று சோழமண்டல சதகம் குறிப்பிடுவது கவிச் சக்கரவர்த்தியான ஒட்டக்கூத்தரையே என்பதாகும்.

இக்கூற்றுக்களால் நாம் இங்கு எடுத்துக்காட்டியது, கூத்தரே இராமாயணம் பாடினர் என்பதாகும். வாணிதாசன் என்ற பெயருக்கான ஆதாரம் வழக்கையொழிய வேறு இல்லை; கூத்தர் பாடவில்லை என்பதற்கும் ஆதாரம் எதுவும் இல்லை என்பதும் உணரத்தக்கது. ஆனல் ஒட்டக்கூத்தர் வரலாற்றை விரிவாக ஆராய்ந்து, ஈட்டி எழுபதும் அவரே பாடினர் என்று பல கதைகளைக்குறிப்பிட்ட மு. இராகவையங்காரவர்கள் தம் ஆராய்ச்சியில் உத்தர காண்டத்தை ஏனே சேர்த்துக்கொள்ளவில்லை. (செங்குந்தர் பிரபந்தத் திரட்டு முன்னுரை).

மற்றுப், பிற்காலத்தில் உத்தர காண்டத்தைப் பற்றி யாரும் எந்தக் குறிப்பும் தந்ததில்லை மற்றுமொரு குறிப்பை

இனிக் கருதலாம். சிலப்பதிகாரம் இந்திர விழவூரெடுத்த காதை யுரையில், அடியார்க்கு நல்லார், பலியிடுதலைக் கூறும்போது மூன்று பாடல்களை இடையில் பிற குறிப்புக்களோடு கூறுகிறார். அவை பின்வருவன:

"மோடி முன்தலையை வைப்ப ரேமுடி
குலைந்த குஞ்சியை முடிப்பரே
ஆடி நின்று குருதிப் புதுத்திலதம்
அம்முகத்தினில் அமைப்பரே."

"அடிக்கழுத்தினுடன் சிரத்தை அரிவராலோ
அரிந்த சிரம் அணங்கின்கைக் கொடுப்பராலோ
கொடுத்தசிரம் கொற்றவையைத் துதிக்குமாலோ
குறையுடலங் கும்பிட்டு நிற்குமாலோ."

"மண்ணி னுளற அறுத்த தங்கள்தலை
வைத்த பீடிகை வலங்கொள
விண்ணி னுயகிதன் யாக சாலைதொறும்
மீளவும் சிலர் மிறைப்பரே."

இம்மூன்றுள் இரண்டாம்பாடல்மட்டும் கலிங்கத்துப்பரணி 97ஆம் பாடல். மற்ற இரண்டும் பரணித் தாழிசைகளாக உள்ளன. ஆனால் எந்தப் பரணியிலுள்ளன என்பது விளங்க வில்லை. இவற்றுள் முதல் தாழிசையின் இறுதியில், "என்பது கவிச் சக்கரவிருத்தி" என்று ஐயரவர்கள் அடியார்க்கு நல்லார் குறிப்பாக அச்சிட்டிருக்கிறார்கள். கவிச்சக்கர விருத்தி என்பது கவிச் சக்கரவர்த்தியாக இருக்கவேண்டும் எனக் கருதலாம். அங்ஙனமாயின், அடியார்க்கு நல்லார் காலத்துக்கு முன் மிகவும் அணிமையிலுள்ள காலப்பகுதியில் கவிச்சக்கரவர்த்தி என வழங்கப் பெற்றார் இருவர்; அவர் சயங்கொண்டார், ஒட்டக் கூத்தர் என்போர். சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியில் இப்பாடல் இல்லை. இப்பரணியில் பாடல்கள் எவை யேனும் விடுபட்டன என்பதாக எந்த வரலாறும் இல்லை. மற்ற வராகிய ஒட்டக்கூத்தர் பாடிய தக்கயாகப்பரணி இன்று கிடைக் கிறது. அதனுள் இவ்விரு பாடல்களும் இல்லை. ஆனால் அவரே குலோத்துங்க சோழன் (I) மகனாகிய விக்கிரமசோழன் கலிங்கப் போர் நிகழ்த்தி வெற்றி பெற்றமையைப் பாராட்டி, மற்றுமொரு

பரணி பாடினர் என்று தக்கயாகப் பரணியாலும் (776 தாழிசை) அதன் உரையாலும் அறிகிறோம்.

"செருத்தந் தரித்துக் கலிங்க ரோடத்
தென்தமிழ்த் தெய்வப் பரணிகொண்டு
வருத்தந் தவிர்த்துல காண்ட பிரான்
மைந்தற்கு மைந்தனை வாழ்த்தினவே"

மைந்தற்கு மைந்தனுவான் விக்கிரமன் பேரனும் தக்கயாகப் பரணியுள் சிறப்பிக்கப் பெறுபவனும் ஆகிய இரண்டாம் இராசராசன். "இப்பரணி பாடினர் ஒட்டக்கூத்தரான கவிச்சக்கரவர்த்திகள் இப்பரணி பாட்டுண்டார் விக்கிரமசோழ தேவர்" என்பது உரை. ஒட்டக்கூத்தர், பரணி கொண்ட பிரான் என்று கூறியவிடத்துக் கொண்டவர் யார், செய்தவர் யார் என்று உரைகாரர் மிகவும் தெளிவாகக் கூறியிருக்கிருர். ஒட்டக்கூத்தரே தாம் பாடிய குலோத்துங்க சோழனுலாவிலும் (27—29) இராசராச சோழனுலாவிலும் (27—28) இதே பரணியைப் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பதும் இவ்விடத்து ஒப்பு நோக்கத்தக்கது.

"......அகளங்கன் — வேற்ருேர்
விரும்பரணில் வெங்களத்தீ வேட்டுக்கலிங்கப்
பெரும்பரணி கொண்டபெருமாள் — தரும்புதல்வன்
கொற்றக் குலோத்துங்க சோழன்."

பெருமான் — விக்கிரம சோழன் என்பது பழைய உரை; அகளங்கன் — விக்கிரமனுக்குரிய பெயர்.

"தரணியொரு கவிகை தங்கக் கலிங்கப்
பரணி புனைந்த பரிதி — முரணிப்
புரந்தரன் நேமி பொருவ அகில
துரந்தான் விக்கரம சோழன்"

இவ்வாறு ஸ்ரீவிக்கிரமன் மீது பாடப்பெற்றதாகிய கலிங்கத்துப்பரணியொன்று மூன்று முறை குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப்பாடினர் அவரே என்றும் கண்டோம். குறிப்பிடுவோரும் அவரே. ஆகவே அடியார்க்கு நல்லார் குறிப்பிடும் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரே: தக்கயாகப் பரணியுரைகாரர் 'ஒட்டக்கூத்தரான கவிச்சக்கரவர்த்திகள்' என்று தெளிவுபடக் கூறுவ

தும் காண்க. எனவே, அடியார்க்கு நல்லார் இந்தப் பரணியி லிருந்தே தம் மேற்கோளை எடுத்துக்காட்டுகிறார் என்பது தெளி வாகிறது. ஆகவே முதற் பாடலாகிய "மோடிமுன் தலையை வைப்பரே" என்ற பாடலும மூன்றும் பாடலாகிய "மண்ணி ளைற" என்ற பாடலும், சயங்கொண்டார் நூலிற் காணப் படாதபோது, ஒட்டக்கூத்தர் பாடிய பரணியின் பாடல் என்றே கொள்ளவேண்டும்.

இதனால் இப்போது இரண்டு செய்திகள் விளக்கமாகின் றன. ஒன்று, அடியார்க்கு நல்லார் ஒட்டக்கூத்தருக்குக் காலத்தால் பின் வந்தவராவார் என்பது. தண்டியாசிரியர் வரலாற்றால் அடி யார்க்கு நல்லார் காலம் 1150—1175 ஆதல் பொருந்தும் என்பது ஆராய்ச்சியில் கண்ட முடிவு. 1118—1163 வரை ஆட்சி செய்த விக்கிரமன், குலோத்துங்கன், இராசராசன் என்ற சோழர் மூவர் காலத்திலும் ஒட்டக்கூத்தர் வாழ்ந்தவராதலால் அவர் பாடலைக் கூறும் ஒட்டக்கூத்தருக்கு இக்கால வரையறை பொருந்தக் கூடியதே. இரண்டாவது, ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழன் மீது கலிங்கத்துப் பரணியொன்று பாடியிருந்தமை உண்மையே என்பது.

இனி, ஒட்டக்கூத்தர் உத்தர ராமாயணம் பாடினாரா என்பது ஆராயத்தக்கது. இதுபற்றி நமக்கு இலக்கியத் துறை யில் ஒரு குறிப்புக் கிடைக்கிறது. சிலப்பதிகாரப் பதிகவுரையில் கணவனை இழந்ததாகிய பெரிய துன்பம் என்பதைக் கூறுமிடத்து அடியார்க்கு நல்லார் "என்றார் பிறரும்" என்று குறிப்பிட்டுப்பின் வரும் பாடலை எடுத்துத் தருகிறார்:

"மக்களிழந்த இடும்பையினும் அனையாளிழந்த
இடும்பையினும்
மிக்கஇடும்பை வேல்வேந்தே விதவை இடும்பை
எனவிளம்பித்
தக்கஅதனால் என்கழுத்தில் தாலிநீதந் தருளென்று
தொக்கமணிநீண் முடியானைத் தொழுதுபின்னும்
இவைசொல்லும்"

நூலை இவர் குறிப்பிடவில்லை. இப்பாடல்இராமாயண உத்தர காண்டம் திக்கு விசயப் படலத்தில் 137ஆம் பாடலாகவுள்ளது. தொடக்கத்தில் ஒட்டக்கூத்தர் காலம் இன்னதென்றும் குறிப்

பிட்டோம். அடியார்க்கு நல்லார் ஒட்டக்கூத்தருக்குப் பின்வந்தவர் ஆனமையால், அவர் கூத்தருடைய பாடலை எடுத்து மேற்கோளாகத் தருதல் பொருந்தக்கூடியதே.

அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்ற சில பரணிப் பாடல்கள் ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழன் மீது பாடிய மற்றொரு கலிங்கத்துப் பரணியின் பாடல்களாக இருத்தல் கூடும் என்று குறிப்பிட்டோம். அப்படியே அவர் இங்குக் குறிப்பிடுகின்ற பாடலைக் கொண்ட உத்தரகாண்டமும் ஒட்டக்கூத்தர் பாடியதாக இருத்தல் பொருந்துவதே. பன்னிரண்டாம் நூற்றூண்டில் இருந்த புலவர் வரலாறுகள் யாவும் ஓரளவு திட்டமாய்த் தெரிந்துள்ளன. வாணியின் தாதன் வரலாறு பொருந்தாது என்று மேலே தெளிவாக்கப்பட்டது. ஆதலால் கிடைக்கின்ற உத்தரகாண்டம் ஒட்டக்கூத்தரே பாடியது என்று நாம் கருதலாம். அடியார்க்கு நல்லார் கருத்து இதுவே ஆதலும் கூடும். மிகப்பலவான நூல்களின் பெயரை எடுத்துக் குறிப்பிடுகின்ற அடியார்க்கு நல்லார் இவர் பெயரைக் குறிப்பிடாமைக்குக் காரணம் மற்றைய ஆசிரியர் அனைவரும் காலத்தால் இவருக்குப் பெரிதும் சேய்மையில் இருந்தமையும் கூத்தர் மிக்க அணிமையில் இருந்தமையுமே ஆகும். அணிமையில் இருந்தமையால் இவர் பெயர் அதிகம் பிரசித்தமெய்தவில்லையென்று அடியார்க்கு நல்லார் கூத்தரைக் குறிப்பிடவில்லை போலும்.

———○———

# 'குமரி மூத்தது'

"மலையன்"

---

'கன்னிக் கடன் காலக் கடனப்பா' 'பெண்ணருமை பெற்றவளுக்குத்தானே தெரியும்' என்பன போன்ற பழமொழிகளை நாட்டுப் புறங்களில் பெரியவர்கள் பேசுவதை நாம் கேட்டிருக்கிறோம். ஒரு பெண், பருவம் அடைந்துவிட்டால், காலத்தில் அவளைத் திருமணம் செய்து கொடுக்கவேண்டும் என்று பெற்றோர்கள் துடிப்பது இயற்கையானதுதான். நாட்டுப்புறங்களிலே, ஒரு பெண் இப்படிப் பருவம் வந்து பலகாலம் திருமணம் ஆகாமல் இருந்தால், ஊரார் துட்டி விசாரிப்பதுபோல் பெற்றவளை விசாரிப்பர். அப்படி இருக்கக்கூடாது என்பது நாட்டுப்புறச் சம்பிரதாயம்.

அப்படி இருக்கின்ற சில நிலைகளை மக்கள், 'கன்னியாகவே கழித்துவிட்டாள்' என்று பேசுவதைக் கேட்டிருக்கிறோம்.

இதே நிகழ்ச்சியை மணிமேகலை தந்த சாத்தன் வேறொரு தொடரால் அமைக்கிறார். 'குமரி மூத்த' என்பதே அவர் குறிக்கும் தொடர்.

'குமரி மூத்து' விடுகின்ற நிலையினைச் சாத்தனார் இரண்டே இடங்களில்தான் மணிமேகலையில் காட்டுகிறார். ஒன்று இயற்கையான – தொடரோடு தொடர்புடைய — நிலைக்கு; மற்றொன்று —அது போன்று வேறொரு பொருள் குறிக்கும் நிகழ்ச்சிக்கு!

தருமதத்தன் — விசாகை — இவ்விருவரிடையே காதல் அரும்புகிறது. இதனால் அதனோடு தொடர்புடைய அலரும் அரும்புகிறது. இதுவே சங்க இலக்கியங்களில் 'அம்பல்' என்று குறிக்கப்படும். தருமதத்தன் பொருள் தேடிப் பிரிகிறான் விசாகையும் 'மணந்தால் தரும தத்தனையே மணப்பேன்' என்று விரதம் பூண்டு இருந்து விடுகிறாள். சென்றவன் திரும்புகிறான் கிழக் காதலனாக! பல ஆண்டுகள் கழித்துத் திரும்பும் தருமதத்தன், விசாகையைத் தன் கிழக்காதலியாகக் காண்கிறான்!

சுருண்டு விழுந்த கூந்தல், பிறைச் சென்னி, காதளவோடிய கயற்கண்கள், கொவ்வைச் செவ்வாய், மின்னலிடை, ஆலிலை வயிறு, அஞ்செஞ் சீறடி இவை எல்லாம் இப்போது இல்லை. 'அன்றிருந்த நிலை எங்கே! இன்றுள்ள நிலை என்னே !', என்று ஏங்குகின்றான் தருமதத்தன்.

இது கண்ட சாத்தனாருக்கே அவலம் சற்று மேலிடுகிறது. விசாகையைக், 'குமரி மூத்தவக் கொடுங்குழை நல்லாள்' (22-143) என்று குறிக்கிறார் அவர் !

எத்தனையோ இன்பக் கனவுகளை எண்ணி எண்ணி, ஏங்கித் தவித்த இளமைத் துடிப்பு, வெறும் கனவாகப் போன நிலையைக் 'குமரி மூத்த' என்று கூறுகிறார் புலவர்.

இனி இதே தொடரை வேறு ஒரு நிலையிற் காட்டுகிறார் மணிமேகலை ஆசிரியர்.

'வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது
தான்தொலை வில்லாத் தகைமையது' (11—49-50)

ஆகிய, அமுதசுரபியை ஆபுத்திரன் பெறுகிறான். பசிப்பிணியால் உழலும் மக்களுக்கு உண்டி கொடுத்து, அதனால் உயிர் கொடுத்த வள்ளல், உலகெங்கும் புகழ் தேடுகிறான். இதுகண்ட இந்திரன் சினந்து நிலவுலகைச் செழிப்பாக்கி விடுகிறான். எங்கும் வளம், எங்கும் செழிப்பு. இனி அமுத சுரபிக்கு வேலையில்லை.

அள்ள அள்ளக் குறையாது உணவைத் தருகின்ற அமுத சுரபி, வாங்க ஆளின்றி ஆபுத்திரன் கையில் இருக்கிறது. அங்குமிங்கும் அலைந்து பசிப்பிணியாற்றிய ஆபுத்திரன் சோம்பேறியாக அமுதசுரபியைத் தலைக்கு வைத்து உறங்குகிறான். இந்த நிலை கண்டு பொருமுகிறான். இவ்வேளை,

"அமரர்கோன் ஆணையின் அருந்துவோர்ப் பெறாது
குமரி மூத்த வென் பாத்திரம்" — (14—77)

என்று பேசுகிறான்.

இங்குக் 'குமரி மூத்த' என்ற தொடர், விசாகை 'குமரி மூத்த' நிகழ்ச்சியை நினைவுபடுத்துகிறது நமக்கு. விசாகை 'குமரி மூத்த' தன்மை இயற்கையானது. அமுத சுரபி 'குமரி மூத்தது', நேரடியாகப் பொருள் தொடர்பு கொள்ளாமல், உவமை வாயிலாகப் பொருள் சிறந்து நிற்கிறது

எனவே, ஒரு பொருள், பலவிதப் பயன்களைத் தன்னுள்ளே அடக்கி வைத்திருந்தும், கேட்பாரற்றுக் கிடக்கும் நிலையிலிருப்பின் அது 'குமரி மூத்த' என்ற தொடரால் குறிக்கப்படுவது காண்கிறோம்.

இதே நிலைமை வள்ளுவரும் முன்னமேயே தெரிந்து வைத்திருக்கிறார். குறளில் ஓரிடத்தில் இதே நிகழ்ச்சியை வேறொரு தொடரால் குறிக்கிறார்.

ஒரு செல்வன். அவனிடம் நிறையப் பொருள் இருக்கிறது. ஆனால் மற்றொருவன் பொருளின்றித் துன்பப்படுகிறான். இவ்வேளை அந்தச் செல்வன் பொருளற்றவனுடைய துன்பத்தைக் கண்டு அவனுக்கு ஏதும் உதவி செய்யாது வறிதே இருக்கிறான். இது, "மிக்க அழகுடைய ஒரு பெண், கன்னியாகவே காலம் கழித்துத் தன் இளமைத் தன்மை மூத்தது" போன்ற நிலையினை ஒத்தது என்கிறார் வள்ளுவர்.

"அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று" (1007)

என்பது குறள்.

இங்கும் ஒரு பொருள் பயனின்றி வீணே கேட்பாரற்றிருக்கும் நிலைக்கே, இளமை மூத்த நிலை தொடர்புபடுத்தப்படுகிறது.

வள்ளுவர் ஈண்டுக் கவனமாக 'மிகநலம் பெற்றாள் தமியள்' என்ற தொடரை அமைத்து, அவலத்தை மிகுவித்து விடுகிறார். தாம் சொல்ல நினைத்ததையும், கொஞ்சம் ஆணித் தரமாகவே சொல்லி விடுகிறார்.

இதனால் 'குமரி மூத்த' நிகழ்ச்சியில் அவலம் தோன்றுகிறது ஒரு பெண் கன்னியாகவே, இளமை இன்பங்களை அடக்கி மூத்து விடுவது, யாருக்குமே அவலந்தோற்றுவிக்கின்ற ஒரு நிகழ்ச்சிதானே!

இதைச் சாத்தனாரும் ஒப்புக்கொள்ளும் முறையில்தான் மணிமேகலையில், 'குமரி மூத்த' என்று இரண்டு இடங்களில் குறிப்பிடுகிறார். ஆனால் இதில் ஒரு கேள்விக்கு நாம் விடையளிக்க வேண்டியிருக்கிறது.

'குமரி மூத்த' நிகழ்ச்சிக்கு வேதனைப்படும், சாத்தனர், 'மணிமேகலை' முழுவதும் – முப்பது காதையிலும் - கதாநாயகி 'மணிமேகலை' 'குமரி மூத்த' நிலையினைத்தானே படம்பிடித்துக் காட்டுகிருர்.– என்பதே கேள்வி !

"கண்டோர் மயங்கும் மணிமேகலையைக் காவி உடுக்கச் செய்து, மொட்டையடிக்கச் செய்து, அணிகலன் நீக்கச் செய்து' பன்மலர் தவிர்க்கச்செய்து அவளைப் பிக்குணியாகச்செய்த அவள் தாயோ மிகவுங் கொடியள்" என்று ஊரார் மாதவியை ஏசும் படியாகச் செய்கிருர் சாத்தனர். இது மட்டுமா! மணிமேகலை யைக் குறிக்கும் இடங்களில் எல்லாம் வெறுமனே குறிப்பதில்லை. 'பைந்தொடி' 'பையரவல்குல்' என்று பல அடைமொழிகளைச் சேர்த்தே குறிக்கிருர். இது சரியன்று என்ருல், ஒரு வேளை 'காவிய மரபு' என்று நினைந்து இதற்கு அமைதி கொள்ளலாம் என்ருலும் 'குமரி மூத்தது' எனுந்தொடர் மணிமேகலையையும் குமரி மூத்தவளாகக் காட்டுகிறதே! இதற்கு ஏன் சாத்தனர் வருந்தவில்லை என்று நம் உள்மனம் உந்திக்கேட்கிறது.

இங்கேயும் இதற்கு அமைதி உண்டு. மணிமேகலை, தன் தாயின் விருப்பத்தை அன்போடு ஏற்று இந்த நிலையைக் கொண்டாள். இதனல் அவளுக்கு யாதொரு மன வருத்தமும் இல்லை ஆனல் விசாகையின் நிலையோ அப்படியன்று; ஆபுத்திரன் கொண்ட பாத்திரத்தின் நிலையும் அதுவன்று; வள்ளுவர் சொன்ன நிலையும் அதுவன்று !

ஆக, ஒரு பொருள் விருப்பத்திற்கு மாருக, வீணே கேட்பாரற்றுக் கிடக்கும் நிலை 'குமரி மூத்த' தன்மைக்குப் பொருத்தமாக உரைக்கப்படும் என்று கொள்ளலாம்.

என்னதான் அமைதி கூறினுலும், நம் உள்மனம் மணிமேகலைக்கு இரங்கத்தான் செய்கிறது,

எத்தனையோ இன்பக் கனவுகளை எண்ணித் துடிக்கின்ற மணிமேகலையின் இதயத்தில் (ஒருவேளை மணிமேகலைக்கு இந்த உணர்வு இல்லாமல் இருப்பதாகச் சாத்தனர் கூறலாம்; ஆனல் உலக இயற்கை நினைந்து) இப்படி ஒரு துறவு மனப்பாங்கைத் தோற்றுவித்த 'தாயே' உறுதியாகக் 'கொடியள்' தான் ! விசாகை போன்று மணிமேகலையையும் "குமரி மூத்தவக் கொடுங்குழை நல்லாள்" என்று குறிக்கவே என் உள்ளம் விழைகிறது !

# திருக்குறளும் சங்க இலக்கியமும்

மு. வை. அரவிந்தன், M.O.L.,
தமிழ்த்துறை, அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

## கலங்கரை விளக்கம்

பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய ஒரு நூல் இன்றும் வாழ்ந்து வருகின்றது என்ருல், மக்கள் அந்நூலைப் பரம் பரை பரம்பரையாகப் போற்றி வருகின்றனர் என்று அறியலாம். அந் நூல் கூறும் கருத்துக்கள் பயனுள்ளவை என்று அறிஞர்களும் சான்றோர்களும் காலந்தோறும் ஏற்றுக்கொண்டு பரப்பினர் என்று உணரலாம். எதிர்காலத்திலும் அந்நூல் வாழும், மக்க ளால் மதிக்கப்படும், அறிஞர்களால் போற்றப்படும் என்று நம்பு வதற்கு இடமுண்டு.

காலம் மாறினுலும் வாழ்க்கையின் அடிப்படைக் கருத் துக்கள் மாறுவதில்லை. மக்களின் நடை உடைகள் மாறினுலும் உள்ளத்துப் பண்புகள் என்றும் ஒரே வகையாய் உள்ளன. காலத் திற்குக்காலம் புறக்கருவிகள்மாறினுலும்மக்களின் அகநிகழ்ச்சிகள் ஒரே வகையாய் உள்ளன. சிறந்த நூல் வாழ்க்கையின் அடிப் படைக்கருத்துக்களை எடுத்துக்கூறி, மனத்தின் பண்புகளை விளக்கி, உள்ளத்தின் உணர்ச்சிகளை உணர்த்தி வாழ்க்கையைப் பண்படுத்துவதால் மக்கள் நெஞ்சத்தில் நிலையான இடத்தைப் பெறுகின்றது; கால வெள்ளத்தை நீந்திக் கரையேறுகின்றது.

திருக்குறள் காலம் கடந்த பெரு நூலாய் மக்களுக்கு நல் வழி காட்டும் வாழ்க்கைத் துணையாய் விளங்கி வருகின்றது.

தமிழிலுள்ள நீதி நூல்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்ந்து ஒரு தட்டில் வைத்து, மற்ருெரு தட்டில் திருக்குறளையும் வைத்தால் இரண்டாவது தட்டே தாழ்ந்திருக்கும். எல்லா நீதி நூல்களும் திருவள்ளுவர் கூறியுள்ள அறவுரைகளை விளக்குவதற் காகவே எழுந்தவை என்று கூறும் அளவிற்குத் திருக்குறள் சிறப் புடன் விளங்குகின்றது. தமிழ்ப் பெருங்காப்பியங்களில் அமைந்

துள்ள அறவுரைகள் யாவும் திருவள்ளுவர் வாக்கின் எதிரொலி யாகவே உள்ளன. கோத்த பளிங்கு மணியினுள் விளங்கும் சிவப்பு நூலைப் போல, பிற்காலத்துச்சான்றோர்கள் கூறிய மணி மொழிகளுள் அமைந்திருக்கும் திருக்குறளின் கருத்துத் தெளி வாகப் புலப்படுகின்றது. கருத்து இனிமையும் பொருள் சுவை யும் தம் நூலில் அமைய வேண்டும் என்று விரும்பிய புலவர்கள் பலரும், திருவள்ளுவர் வழங்கியுள்ள கருத்துக் கனிகளைப் பிழிந்து சாறு எடுத்துத் தம் நூலில் பெய்து கொண்டனர். செங்கதிர்ச் செல்வனிடமிருந்து ஒளிபெற்றுத் திகழும் திங்களைப் போல — நந்தா விளக்கின் சுடரால் ஏற்றப்பட்டு விளங்கும் சிறு விளக்கு களைப் போலத் திருவள்ளுவரிடமிருந்து வெளிப்பட்ட கருத் தொளியால் உள்ளொளி பெற்ற புலவர்கள் பலர்.

இளங்கோவடிகள் முதல் பாரதியார் வரை வாழ்ந்த புல வர்கள் அனைவரும் திருக்குறளைக் காட்டிய நெறியைப் போற்றி னர். திருக்குறள், தோன்றிய நாள்முதல் இன்றுவரை இலக்கிய உலகத்தில் கலங்கரை விளக்கமாய்த் திகழ்ந்து வருகின்றது.

## பொதுமை

தமிழிலக்கிய உலகத்தில் பொதுமை கண்ட அறிஞர் திரு வள்ளுவர். அவர் தம் காலத்தில் அரசாண்ட மன்னனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற நூல் இயற்றவில்லை. குறிப்பிட்ட சமயத்தையும் சமயத் தலைவரையும் தம் நூலில் போற்றிப் புகழ வில்லை. தாம் வாழ்ந்த நாட்டில் வளத்தைத் தம் நூலில் பாராட்ட வில்லை. தாம் விரும்பிய நகரத்தின் அமைப்பையும் சிறப்பையும் வியந்து நூல் எழுதவில்லை. எல்லா மக்களுக்கும் பொதுவான நூல் ஒன்றை அவர் இயற்றினர்.

அறத்துப் பாலில் வாழ்க்கையின் அடிப்படை உரிமைகளை விளக்கி அறத்தை நிலைநாட்டினர். இன்ன சமயத்தை மேற் கொள்ளவேண்டும் என்று விதிக்காமல் எல்லோரும் மேற் கொள்ளத் தக்க அறநெறியை வகுத்துக் கூறினர்.

பொருட்பாலில் இன்ன மன்னனின் ஆட்சியும் நாடும் அர ணும் படையும் குடியும் சிறந்தவை என்று பாராட்டவில்லை. பொதுவாக நாட்டின் தலைவன் ஒருவன் எவ்வாறு ஒழுகவேண்டும் என்றும், நாடு அரண் படை அமைச்சு ஆகியவை எவ்வாறு

அமைய வேண்டும் என்றும், மக்களிடம் இன்ன இன்ன நற்பண்புகள் இருக்கவேண்டும் என்றும் எல்லோரும் கொள்ளத்தக்கமுறையில் கூறினர்.

காமத்துப் பாலில் உயர்ந்த மக்கள் உள்ளத்தில் எழும் தூய காதல் உணர்ச்சியைப் பொதுப் படையாகக் கூறி விளக்கினர்.

சங்க இலக்கியத்தில் மன்னனுக்கு அறிவுரை கூறும் பாடல்கள் பல உண்டு. ஏதேனும் ஒரு குறிப்பிட்ட தெய்வத்தை மக்கள் சிலர் வழிபடும் நிகழ்ச்சியைக் குறிப்பிடும் பாடல்கள் உண்டு. ஆனால் பொதுவான நீதிகளையும் மன்னனுக்கும் மக்களுக்கும் உரிய அறநெறிகளையும் உணர்த்தும் பொதுவான பாடல்கள் மிகக் குறைவாகவே உள்ளன.

திருவள்ளுவர் இக்குறையைப் போக்கினர். எல்லோருக்கும் பொதுவான நூல் ஒன்றை இயற்றினர்.

## புரட்சி

முன்னோர் கூறிய கருத்துக்கள் என்று எல்லாவற்றையும் கண்மூடிப் போற்றாமல் நல்லனவற்றை மட்டும் மேற்கொண்ட புரட்சி மனம் உடையவர் திருவள்ளுவர். வாழ்க்கைக்குத் தீமை தருபவை-அறநெறிக்கு மாறானவை பழக்கத்தில் இருப்பினும் அவற்றை அஞ்சாது உடைத்து எறிந்த புரட்சி வீரர் அவர். இலக்கியம், மக்களுடைய வாழ்க்கை இவ்வாறு அமைந்திருக்கிறது என்பதைக் காட்டுவதோடு அல்லாமல், வாழ்க்கை எவ்வாறு அமையவேண்டும் என்பதையும் விளக்கவேண்டும் என்ற கருத்துடையவர் அவர்.

சங்க காலத்தில் இருந்த சில தீமைகளை — அறநெறிக்கு மாறான செயல்களைக் கடிந்தவர் திருவள்ளுவர். சங்க இலக்கியத்தைக் கற்கும்போது அக்கால மக்கள் புலால் உண்டனர், புலாலுக்காக உயிர்க்கொலை புரிந்தனர்; கள்ளுண்டு களித்தனர் என்று அறிகின்றோம். மேலும் சூது ஆடிப் பொழுது போக்குதலும் பரத்தையருடன் மகிழ்ந்து வாழ்தலும் அக் காலத்தில் இருந்தன என்றும் அறிகின்றோம்.

## புலால் மறுத்தல்

சங்க நூல்கள் பழந்தமிழர் புலால் உண்டு திளைத்ததை விரிவாகக் கூறுகின்றன. புறநானூறு,

"மைவிடை இரும்போத்துச் செந்தீ சேர்த்திக்
காயம் கனிந்த கண்ணகன் கொழுங்குறை
நறவுண் செவ்வாய் நாத்திறம் பெயர்ப்ப
உண்டும் தின்றும்" (புறம். 364)

வாழ்ந்த வாழ்க்கையைக் குறிப்பிடுகின்றது.

"எஃகுபோழ்ந் தறுத்த வான்நிழக் கொழுங்குறை
மையூன் பெய்த வெண்ணெல் வெண்சோறு
நனையமை கள்ளின் தேறலொடு மாந்தி" (பதிற். 12)

தமிழ் மக்கள் வாழ்ந்த வாழ்க்கையைப் பதிற்றுப் பத்துப் பாடுகின்றது. புலால் உணவைப் பற்றிய இத்தகைய குறிப்புக்கள் பல, சங்க நூல்களில் உள்ளன.

சங்க காலத்தில் புலால் உண்ணாத மக்களும் சிலர் இருந்தனர். அவர்கள் உண்ட உணவின் சிறப்பைச் சங்க நூல்களில் காணலாம். கோழியும் நாயும் நுழையாத தூய இல்லங்களில்,

"சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்து
உறுப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி அளைஇ, பைந்துணர்
நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த
தகைமாண் காடி" (பெரும். 306—310)

வகைபட விருந்தினர் பெற்றனர் என்பதைப் பெரும்பாணாற்றுப் படை கூறுகின்றது.

"உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோறு" (அகம். 86)

உண்டதை அகநானூறு அறிவிக்கின்றது.

இவ்வாறு சங்க காலப் புலவர்கள் தம் காலத்து மக்கள் வாழ்க்கையை — உள்ளதை உள்ளவாறே இலக்கியத்தில் காட்டினர். மேலும் புலால் உண்ணும் வழக்கத்தை அக்காலப் புலவர்கள் கடிந்து ஒதுக்கவில்லை. தீயது என்று கூறவில்லை.

புலால் உண்ணும் தீய வழக்கத்தைத் திருவள்ளுவர் கடிந்தார், வெறுத்து ஒதுக்கினர்.

## கொல்லாமை

சங்ககால மக்கள் தாம் வழிபடும் தெய்வங்களுக்கு ஆடு முதலிய உயிரினங்களைப் பலியிட்டு வழிபட்டனர். குறவர்கள், வெறியாடு களந்தோறும் உயிர்க்கொலை நடந்தது.

"... ... ... வெண்பொறி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து" (முருகு: 231—234)

குறவர்கள் முருகனை ஆற்றுப்படுத்திய செய்தியை நக்கீரர் பாடியுள்ளார்.

வெறியாடு களத்தில் உயிர்க்கொலை நடப்பதை விரும்பாதவர் சிலர் அக்காலத்தில் இருந்தனர்.

"... ... மென்முறிச்
சிறுகுளகு அருந்து தாய்முலை பெறாஅ
மறிகொலைப் படுத்தல் வேண்டி, வெறிபுரி
ஏதில் வேலன் கோதை துயல்வரத்
தூங்கும் ஆயின் அதூஉம் நாணுவல்" (அகம்: 292)

என்று ஒரு தமிழ்ப்பெண் கூறுவதாய் அகநானூற்றுப் பாடல் அமைந்துள்ளது.

"வலைஞர் முன்றில் மீன்பிறழவும்
விலைஞர் குரம்பை மாஈண்டவும்
கொலை கடிந்தும் களவுநீக்கியும்" (பட்டினப் 198—200)

அக்காலத்தில் சிலர் வாழ்ந்தனர் என்பதைப் பட்டினப் பாலையால் அறியலாம்.

கலித்தொகைப் பாடல் ஒன்றில், கொக்கு உயிருள்ள மீனைக் கொல்லாமல் உலர்ந்த மீனைத் தின்று கொல்லா நோன்பு மேற்கொண்டு வாழ்வதாய், நல்லந்துவனர் கற்பனை செய்கின்றார்.

"கரைகவர் கொடுங்கழி கண்கவர் புள்ளினம்
திரையுறப் பொன்றிய புலவுமீன் அல்லதை
இரையுயிர் செகுத்து உண்ணாத் துறைவன்" (கலித். 131)

என்ற அடிகள் படித்து மகிழத்தக்கவையாய் உள்ளன. இருப்பி

னும் சங்கப் புலவரில் எவரும் கொலையைக் கடிந்து தனிப் பாடலோ நூலோ இயற்றவில்லை. இக் குறையைத் திருவள்ளுவர் போக்கினர். தம் நூலில், 'கொல்லாமை' என்று ஓர் அதிகாரம் வகுத்துத் தம் கருத்தை நன்கு விளக்கினர்.

## வரைவின் மகளிர்

சங்ககாலத்து அகப்பொருட் பாடல்கள், தலைவன் பரத்தையரை நாடிச் செல்வதைக் கூறுகின்றன. அதை அறிந்து தலைவி ஊடல் கொள்ளுவதை உரைக்கின்றன. தலைவியின் ஊடலைத் தீர்க்கப் பாணன் வருவதைப் பாடுகின்றன.

ஆனல் திருவள்ளுவரது நூலில் — காமத்துப் பாலில் பரத்தையர்க்கு இடமில்லை. அவர் காட்டும் தலைவன் பரத்தையரை நாடிச் செல்வதில்லை; பரத்தையர் சேரியில் நாளும் ஆடல் பாடல்களில் ஈடுபட்டு அங்கே இருப்பதில்லை; அதை அறிந்து தலைவி ஊடல் கொள்வதில்லை; அதைத் தீர்க்கப் பாணன் வருவதில்லை; பாணனிடம் தலைவி பரத்தையரையும் தலைவனையும் பழித்துப் பேசுவதில்லை; அதனைப் பாணன் வாயிலாக அறிந்த பரத்தை தலைவியை இகழ்வதில்லை; தலைவன் தன் வீட்டிற்குத் தயக்கத்துடன் வருவதில்லை; தலைவன் வீட்டிற்குள் நுழைந்தபின், தலைவி ஊடல்கொண்டு பேசாமல் இருப்பதில்லை.

திருவள்ளுவர் நூலில் — காமத்துப்பாலில் மருதத்திணை உண்டு; தலைவி ஊடல் கொள்வதுண்டு; தலைவன், தலைவியின் ஊடலைப் போக்குவதுண்டு. ஆனல் அங்கே பண்பாடு வெளிப்படுகின்றது; அறம் வாழ்கிறது.

> ''இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்
> வல்லது அவரளிக்கு மாறு'' (குறள். 1321)

என்று கூறித் தலைவி ஊடல் கொள்ளுகின்ருள். அவள் பொய்யாக வருவதை அறிந்த தலைவன்,

> ''ஊடுக மன்னே ஒளியிழை யாமிரப்ப
> நீடுக மன்னே இரா'' (குறள்: 1329)

என்று கூறிப் பெரிதும் மகிழ்கின்ருன்;

> ''தவறில ராயினும் தாம்வீழ்வார் மென்தோள்
> அகறலின் அங்கொன் றுடைத்து'' (குறள்: 1325)

என்று கூறி இன்புறுகின்ருள்.

திருவள்ளுவர் பொருட்பாவில் பொருட்பெண்டிரின் பொய்ம்மை மயக்கத்தைக் கடிந்தார். பொருட்பெண்டிரின் தொடர்பால் விளையும் கேடுகளை விளக்கினார். காமத்துப் பாலில் பரத்தையருக்கு இடம் தராமல் மருதத்திணையைத் தூய்மையாக்கி நூலை இனிது முடித்தார்.

திருவள்ளுவர் மருதத் திணையில் செய்த இப்பெரும் புரட்சியைப் பிற்காலப் புலவர்கள் உணர்ந்து போற்றவில்லை. திருவள்ளுவருக்குப் பின் தோன்றிய புலவர்கள் இயற்றிய கோவை நூல்களில், வழக்கம்போல் மருதத்திணையில் பரத்தையர் புகுந்தனர். பரத்தையர் வாழும் சேரியில் ஆடல் பாடல்கள் நிகழ்ந்தன. தலைவன் பரத்தையர் சேரிக்குச் சென்று பொழுதைக் கழித்தான். பாணன் வந்து போனான். தலைவி ஊடல் கொண்டாள். தலைவன் வந்து ஊடலைத் தீர்த்து வைத்தான்.

திருக்குறள் உரையாசிரியர்களும் திருவள்ளுவர் செய்த பெரும் புரட்சியை ஏனோ உணரவில்லை. உரை எழுதும்போது அகப்பொருள் இலக்கணம் அவர்களை ஆட்கொண்டு வெற்றி பெறுகின்றது.

## கள்ளுண்ணாமை

சங்ககால மக்கள் கள்ளுண்டு திளைத்து ஆடினர். கள்ளுண்டு களிக்கும் வாழ்க்கையைச் சங்கப் புலவர்கள் 'மட்டுண் வாழ்க்கை' என்று சிறப்பித்துப் பாடுகின்றனர்.

'தேள் கடுப்பன்ன நாள்படு தேறல்' (புறம்: 392)

என்று கள்ளின் பெருமையைக் கூறுகின்றனர். அக் காலத் தமிழகத்தில் கள் விற்கும் கடைகள் பல இருந்தன. அங்கே கள் புளித்து நாறும் மிடாக்கள் வீற்றிருந்தன. பெரும்பானைகளில் இருந்த கள்ளை,

''இஞ்சிவ் விராய பைந்தார் பூட்டிச்
சாந்துபுறத்து எறிந்த தசும்பு துளங்கு இருக்கைத்
தீஞ்சேறு விளைந்த மணிநிற மட்டம்'' (பதிற். 42)

என்று பதிற்றுப்பத்துப் புகழ்கின்றது. இத்தகைய கள்ளை உண்டபின் களிப்பு மிகுதியால் கூத்தாடும் வழக்கம் இருந்தது. கள், நாள்தோறும் உண்ணும் உணவுடன் சேர்ந்து இருந்தது.

'இடும் மன்னனை வாழ்த்திய புலவர்களும்,

'இலங்கிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய
மணங்கமழ் தேறல் மடுப்ப, நாளும்
மகிழ்ந்து இனிதுஉறைமதி, பெரும!'
(மதுரைக். 779—781)

என்று வாழ்த்தினர். அதியமான் இறந்தபோது ஔவையார்,

'சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே!
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந்து உண்ணும் மன்னே'
(புறம்: 235)

என்று புலம்புகின்றார்.

கள், மட்டு, தேறல், மது, மகிழ், பிழி, நறவு — என்று பலவகையான குடிவகைகள் அக்காலத்தில் இருந்தன. வீடு தோறும் மதுவைக் காய்ச்சும் வழக்கமும் இருந்தது.

கள்ளுண்ணாத மக்கள் சிலர் அக்காலத்திலும் இருந்தனர். அவர்கள்,

'மட்டு நீக்கி மதுமகிழ்ந்து' (பட்டினப்—108)

வாழ்ந்ததாய்ப் பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது. ஆனால் சங்கப் புலவர்களில் எவரும் கள்ளுண்ணும் வழக்கம் தீயது என்று கடிந்து பாடவில்லை.

திருவள்ளுவர் கள்ளால் விளையும் தீமைகளைத் தெளிவாக உணர்ந்தார்; கள்ளைப் புறக்கணித்தார்; கள்ளுண்டு மயங்கிக் கிடக்கும் வாழ்வை வெறுத்தார். தமிழ் மக்களுக்கு 'உண்ணற்க கள்ளை!' என்று அறவுரை கூறினார். சங்கப் புலவர் எவரும் செய்யாத சீர்திருத்தத்தைத் திருவள்ளுவர் செய்தார். அவருக்குப் பின் தோன்றி நீதி நூல்கள் இயற்றிய புலவர்கள் பலரும் அவர் செய்த சீர்திருத்தத்தை ஏற்றுக்கொண்டனர்; அவரைப் பின் பற்றி அறவுரை கூறினர்.

## சூது

சங்க காலத்தில் சூதாடும் வழக்கம் பெருகி இருந்தது முதியவர்கள் ஊர்ப் பொது மன்றங்களில் கூடி, நாய் வடிவாகச் செய்யப்பட்ட சூதுக் காய்களை நிலத்தில் பள்ளம் விழும் அள

விற்கு இடைவிடாது உருட்டிப் பொழுது போக்கினர். இச் செய்தியை,

"நரைமூதாளர் நாய்இடக் குழிந்த
வல்லின் நல்லகம்" (புறம்-52)

என்று புறநானூறு தெரிவிக்கின்றது. சிறுவர்கள் வேப்ப மரத்தின் நிழலில் மண் தரையில் கோடுகள் கிழித்து, நெல்லிக் காய்களைச் சூதுக் காய்களாக வைத்து உருட்டி விளையாடி மகிழ்ந்தனர் என்பதை,

'பொரியரை வேம்பின் புள்ளி நீழல்
கட்டளை யன்ன வட்டரங்கு இழைத்து
கல்லாச் சிறுஅர் நெல்லிவட் டாடும்
வில்லேர் உழவர் வெம்முனைச் சீறூர்' (நற்—3)

என்று நற்றிணை அறிவிக்கின்றது. மன்னனும் புலவரும் சேர்ந்து சூதாடியதைப் புறநானூறு (48) குறிப்பிடுகின்றது.

சூது, நாய் வடிவில் செய்த சூதுக்காய், சூதாடும் பலகை —ஆகியவற்றைக் குறிக்கும் சொற்களாகிய வல், வல்லநாய், வல்லப் பலகைஎன்பவை முற்காலத்து மக்கள் பேச்சுவழக்கிலும், புலவர்கள் இயற்றிய நூல் வழக்கிலும் பெரிதும் இடம் பெற்றிருந்தன. தொல்காப்பியர் அச்சொற்கள், புணரும்போது ஏற்படும் மாறுதல்களைத் தம் நூலில் (புள்ளிமயங் —78, 79) குறிப்பிடும் அளவிற்குப் பெருவழக்காய் இருந்தன.

சங்க காலத்திற்குப் பின், தமிழ் மக்கள் காதில் 'வேண்டற்க சூதினை!' என்ற புரட்சிக் குரல் ஒலித்தது, இப் புதுக் குரல் திருவள்ளுவரிடமிருந்து எழுந்தது. இக்குரல் திருவள்ளுவருக்குப் பின் தோன்றிய நீதி நூல்களில் எல்லாம் சென்று எதிரொலித்தது; சான்றோர் நெஞ்சங்களில் போய் ஆழப் பதிந்தது.

இவ்வாறு திருவள்ளுவர் தமிழ் மக்கள் வாழ்வில் செய்த புரட்சிகள் பல, தமிழ்ச் சமுதாயத்தில் ஊறிப் போய்க் கிடந்த தீய வழக்கங்கள் பலவற்றை அவர் அஞ்சாது எதிர்த்து அற முழக்கம் செய்தார்.

### காலத்தின் அடிச்சுவடு

ஒரு புலவர் எழுதிய நூலின் துணைகொண்டு அவர் வாழ்ந்த

காலத்தின் தன்மையை அறிந்துகொள்ள முடியும். அப்புலவர் வாழ்ந்த சமுதாயத்தின் நிலையை உணர முடியும். எந்தக் கலைஞ ராலும் காலத்தின் பிடிப்பிலிருந்து முற்றிலும் விடுபட முடிந்த தில்லை. காலம் தன் அடிச்சுவட்டைக் கலைஞர்களின் படைப்புக் களில் நன்கு பதியுமாறு செய்து விடுகின்றது. திருவள்ளுவர் நூலிலும் அவர் வாழ்ந்த காலத்தின் அடிச்சுவடு பதிந்திருக் கின்றது.

திருவள்ளுவர் தம் காலத்தில் வாழ்ந்த மக்களிடமிருந்த புலால் உண்ணும் வழக்கத்தைத் தம் நூலில் கடிந்தார். ஆனால் அவரே நிணம் தீயில் இடும்போது உருகும் தன்மையை உவமை யாகக் கையாண்டுள்ளார்:

'நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல்' (குறள்: 1260)

கள்ளுண்பதைக் கடிந்து உரைத்த அவரது நூலில், கள் இடம் பெற்றுக் கருத்தை விளக்க முன் வருகின்றது.

'உண்டார்க ணல்ல தடுநறுக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று' (குறள்: 1090)

'களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படும் தோறும் இனிது' (குறள்: 1145)

'வேண்டற்க சூதினை' — என்று கூறிய திருவள்ளுவரின் நூலில்,

'அரங்கின்றி வட்'டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்' (குறள்: 401)

என்ற குறளில் சூது இடம் பெற்றுள்ளது.

## புதுவழி

தமிழிலுள்ள அகத்திணைப்பாடல்கள்நாடகம்போல், அமை யத்தக்கவை. தொடங்கி வளர்ந்து முடியும் நாடகத்தைப்போல், அகத்திணைப்பாடல்களை முறைப்படுத்தி அமைக்கமுடியும். ஆனால் சங்க இலக்கியத்திலும் தொல்காப்பியத்திலும் இத்தகைய நாடக அமைப்பு இல்லை. பிற்காலத்தில் எழுந்த கோவை நூல்களும் அகப்பொருள் இலக்கணங்களும் அகத்திணைக் காட்சிகளை நாடக மாக அமைத்துக் காட்டுகின்றன.

அகத்திணைக் காட்சிகளை நாடகம்போல் முதன் முதலில் அமைத்தவர் திருவள்ளுவரே. அவர் இயற்றிய காமத்துப்பால் ஓர் அழகிய நாடகமாக அமைத்து இன்பமூட்டுகின்றது. திருவள்ளுவரே பிற்காலக் கோவை நூல்கள் நாடகமாக அமைவதற்குப் புதுவழி காட்டினார் என்னலாம்.

## புலமை

திருவள்ளுவர் கற்க வேண்டிய நூல்களைக் கசடறக் கற்றவர், நுண்மாண் நுழைபுலம் உடையவர். மதிநுட்பம் நூலோடு வாய்க்கப் பெற்றவர். அவர் இலக்கிய உலகத்தில் தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை 'நவில்தொறும் நூல்நயம் போலும்' (குறள் —783), 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' (குறள்—1110) ஆகிய உவமைகளின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

திருவள்ளுவர் தமக்கு முன்னிருந்த இலக்கியங்களைக் கற்றுத் தெளிந்து ஆழ்ந்த புலமை பெற்றிருக்கின்றார். இவ்வாறு அவர் பெற்ற விழுமிய புலமையிலிருந்து திருக்குறள் மலர்ந்துள்ளது. ஆதலின், சங்க இலக்கியக் கருத்துக்களுக்கும் திருக்குறட் கருத்துக்களுக்கும் நிறைய ஒற்றுமைகள் உள. அவற்றை இங்கே கவனிப்போம்.

## அறத்துப் பால்

'நீரின் றமையா உலகம் போல'

என்பது, நற்றிணைப் பாட்டொன்றின் (நற். 1) அடியாகும்.

''நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு'' (குறள்-20)

என்பது குறட்பா.

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப' (செய்யுள்-171)

என்ற தொல்காப்பியர் வாக்கு,

''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்'' (குறள்-28)

என்ற குறளை நினைவூட்டுகின்றது.

'சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல' (புறம்-31)

என்ற புறநானூற்றின் கருத்தும்,

"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்
காக்கம் எவனோ உயிர்க்கு" (குறள். 31)

என்ற குறட்கருத்தும் ஒத்துள்ளன.

'கற்புள்ள பெண்ணே,
வான்தரும் கற்பினள்' (கலி—16)

என்றும்,

அருமழை தரல்வேண்டின் தருகிற்கும் பெருமையனே (கலி—39]

என்றும் கலித்தொகை புகழ்கின்றது. திருவள்ளுவர்,

'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை' (குறள்—55)

என்று பெண்ணின் பெருமையைப் பாடுகின்றார்.

புறநானூற்றில்,
'நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோள்......
கொண்ட வாளொடு படுபிணம் பெயரா
செங்களம் துழவுவோள், சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுஉவந் தனளே' (புறம்—278)

என்று கூறிய நச்செள்ளையாரின் குரல்,

'ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்' (குறள்—69)

என்ற குறளிலும் காணப்படுகின்றது.

'ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கின் கழுவாயும் உளஎன,
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்

செய்திகொன் றோர்க்கு உய்தி இல்லென
அறம் பாடிற்றே'  (புறம்: 34)

என்று புறநானூறு கூறும் விழுமிய கருத்தும்,

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'  (குறள்: 110)

என்ற குறட் கருத்தும் ஒப்புமையுடையன. இக் குறளுக்கு உரை எழுதும்போது பரிமேலழகர்க்கு மேலே கண்ட புறப்பாட்டே நினைவுக்குவருகின்றது. அவர், 'பெரிய அறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலை அறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், குரவர்த் தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல்' என்று எழுதுகின்றார்.

'இல்லாது நோக்கி இளிவரவு கூறுமுன்
நல்லது வெஃகி வினைசெய்வார்'  (பரி-10)

என்று பரிபாடல் கூறும் கருத்துக் கீழ்வரும் குறளை நினைவூட்டுகின்றது.

'இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள'  (குறள்—223)

அகநானூற்றுப் பாட்டு ஒன்றில் (அகம்—69) உள்ள 'ஈதல் இன்பம்' என்ற தொடர் திருக்குறளில்,

'ஈத்துவக்கும் இன்பம்'  (குறள்: 228)

ஆகக்காட்சியளிக்கின்றது.

'ஈதல் இரந்தார்க்கொன்று ஆற்றாது வாழ்தலின்
சாதலும் கூடுமாம் மற்று'  (கலி: 61)

என்று கலித்தொகையில் இடம்பெற்றுள்ள கருத்தும்,

'சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை'  (குறள்: 230)

என்று திருவள்ளுவர் கூறும் கருத்தும் ஒத்துள்ளன.

திருமுருகாற்றுப் படையில் உள்ள,

'வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர்' (முருகு:248)

என்ற அடி,

'வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்' (குறள்: 265)

என்ற குறளை நினைவூட்டுகின்றது.

'நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும், அறிபவர்
நெஞ்சத்துக் குறுகிய கரிஇல்லை' (கலி. 125)

என்ற கலித்தொகைப் பாட்டொன்றின் ஈரடிகள் கீழ்வரும் குறளுடன் ஒத்துள்ளன:

'தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்' (குறள். 293)

கலித்தொகையில் உள்ள,

'பிறர்நோயும் தன்நோய்போற் போற்றி அறனறிதல்
சான்றவர்க் கெல்லாம் கடன்' (கலி—139)

என்ற பொன்மொழிகளைப் படிக்கும்போது,

'அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை' (குறள்—315)

என்ற குறள் நினைவுக்கு வருகின்றது.

'நன்றல் காலையும்' என்று தொடங்கும் அகநானூற்றுப் பாடலில் (113) உள்ள,

'அலங்கல் அஞ்சினைக் குடம்பை புல்லெனப்
புலம்பெயர் மருங்கில் புள்ளெழுந் தாங்கு,
மெய்யிவண் ஒழியப் போகி, அவர்
செய்வினை மருங்கில் செலீஇயர் என்உயிரே!'

என்ற உவமையும் பொருளும்,

'குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு' (குறள்: 338)

என்ற குறளில் இடம் பெற்றுள்ளன.

## பொருட்பால்

'இன்சொல் எண்பத்தை ஆகுமதி' (புறம்—40)

என்று புறநானூற்றுப் புலவர் ஒருவர், தமிழ்மன்னன் ஒரு

வனுக்குக் கூறிய அறிவுரையைத் திருவள்ளுவர் எல்லா மன்னர்களுக்கும் பொதுவாக்குகின்றார்.

'காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்' (குறள்: 386)

கபிலர் திருமுடிக் காரியை நோக்கி,

'பலரும் வருவர் பரிசில் மாக்கள்
வரிசை அரிதலோ அரிதே
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே' (புறம்:121)

என்று கூறிய கருத்து, திருவள்ளுவர் வாக்கில் இடம்பெற்று எல்லா மன்னர்களுக்கும் பொதுவாகின்றது.

'பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்' (குறள்: 528)

கலித்தொகைப் பாட்டொன்றில் (கலி. 130) வரும்,

'குடிபுறங் காத்தோம்பும் செங்கோலான்'

என்ற அடி,

'குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்' (குறள்: 549)

என்ற குறளை நினைவூட்டுகின்றது.

'முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்' (நற். 358)

என்ற நற்றிணைக் கருத்து,

'பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்' (குறள்: 580)

என்ற குறளை நினைவூட்டுகிறது.

புறநானூற்றில் மருத்துவன் தாமோதரனார்,

'ஆரைச் சாகாட்டு ஆழ்ச்சி போக்கும்
உரனுடை நோன்பகட்டு அன்ன எங்கோன்' (புறம்-60)

என்று திருமாவளவனைப் போற்றியுள்ளார். திருவள்ளுவரும் முயற்சியுடையவனுக்குப் பகட்டை உவமையாக,

'மடுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து' (குறள்: 624)

என்ற குறளில் கூறியுள்ளார்.

புறநானூற்றில், 'செய்திரங் காவினைச் சேண் விளங்கும்' புகழை மன்னன் ஒருவனிடம் கண்டு சங்கப் புலவர் ஒருவர்பாராட்டினர். அம் மன்னனிடம் விளங்கிய அப் பண்பு எல்லோருக்கும் தேவை என்பதை உணர்ந்த திருவள்ளுவர்,

'எற்றென்று இரங்குவ செய்யற்க' (குறள்: 655)

என்று பொதுவாகக் கூறினர்.

'பெயல் நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல' (குறுந்–29)

என்று குறுந்தொகைப் பாட்டு ஒன்றில் வரும் உவமை, கீழ்உள்ள குறளைநம் கண்முன் காட்டுகிறது.

'சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று' (குறள் 660)

'விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஒட்டன்றோ வன்க ணவர்க்கு' (குறள்: 775)

என்ற குறளை நினைவூட்டுகின்றது.

கபிலர் நற்றிணையில்,

'... பெரியோர்
நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே' (நற். 32)

என்று கூறும் கருத்தும்,

'நாடாது நட்டலின் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு' (குறள்: 791)

என்ற குறளில் வள்ளுவர் கூறும் கருத்தும் ஒரே வகையாய் உள்ளன.

குறுந்தொகைப் பாட்டொன்றில் (குறுந். 230) வரும்,
'பேதைமையார் பெருந்தகை கெழுமி
நோதகச் செய்தது ஒன்றுடையார் கொல்லோ'
என்ற அடிகள்,

'பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்' (குறள்: 805)

என்ற குறளோடு ஒத்துள்ளன.

## காமத்துப் பால்

'பெருந்தோட் குறுமகள் அல்லது
மருந்து பிறிதில்லை யான்உற்ற நோய்க்கே' (குறுந்: 8)

என்ற குறுந்தொகைப் பாட்டின் அடிகள்,

'பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து' (குறள்.1102)

என்ற குறளுடன் ஒத்துள்ளன,

தம்மில் தமதுண் டன்ன சினைதொறும்
தீம்பழம் தூங்கும் பலவின்
ஓங்குமலை நாடனை...' (குறுந். 83)

என்ற குறுந்தொகைப் பாட்டொன்றின் அடிகளில் உள்ள உவமை,

'தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு' (குறள்: 1107)

என்ற குறளில் இடம் பெற்றுள்ளது.

'...... யாக்கைக்கு
உயிர்இயைந் தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரிவரி யோனே' (அகம்: 339)

என்று நெடுந்தொகை கூறும் காதல் கருத்துக்கள்,

'உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு' (குறள்: 1122)

'வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை, சாதல்
அதற்கன்னள் நீங்கு மிடத்து' (குறள்: 1124)

என்ற குறள்களில் ஒளிர்கின்றன.

'காமக் கடும்பகையின் தோற்றினேற்கு ஏமம்
எழில்நுதல் ஈத்த இம்மா' (கலி. 139)

இவை கலித்தொகைப் பாட்டொன்றின் ஈரடிகள்.

'காமம் உழந்து வருந்தினோர்க்கு ஏமம்
மடல்அல்ல தில்லை வலி' (குறள்: 1131)

இது திருவள்ளுவர் வாக்கு.

அகநானூறு கூறும்,

'வருவீர் ஆகுதல் உரைமின் மன்னோ
... ... ...
நின்றாங்குப் பெயரும் கானம்
சென்றோர் மன்என இருக்கிற் போர்க்கே'
(அகம்: 387)

என்ற கருத்துக்கள்,

'செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை' (குறள்: 1151)

என்ற குறளை நினைவூட்டுகின்றன.

கலித்தொகைப் பாட்டொன்றில் வரும்,

'நலிதரும் காமமும் கௌவையும் என்றிவ்
வலிதின் உயிர்காவாத் தூங்கியாங்கு என்னை
நலியும் விழுமம் இரண்டு' (கலி. 142)

என்ற அடிகளைப் படிக்கும்போது கீழ்வரும் குறளை நம் நெஞ்சம் நினைக்கின்றது.

'துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து' (குறள்: 1218)

பரிபாடலில் வரும்,

'காமக் கணிச்சியால் கையறவு வட்டித்துச்
சேமத்திரை வீழ்த்துச் சென்றமளி சேர்குவோர்,
(பரி. 10)

என்ற அடிகளும்,

'காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும்
நாணுத்தாள் வீழ்த்த கதவு' (குறள்: 1251)

என்ற குறளும் ஒத்துள்ளன.

கலித்தொகையில் மருதன் இளநாகனார்,

'புலப்பேன்யான் என்பேன்மன் அந்நிலையே அவற்காணின்
கலப்பேன் என்னும் இக்கையறு நெஞ்சே' (கலி. 67)

என்று கூறிய கருத்துக்களைத் திருவள்ளுவர்,

'புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு' (குறள்: 1259)

என்ற குறளில் கூறுகின்றார்.

திருக்குறளையும் சங்க இலக்கியத்தையும் ஒப்பிட்டுக் கற்கும் போது, ஒத்த கருத்துக்கள் பல வெளிப்படுகின்றன. திருவள்ளுவரது புலமை மாண்பு வெளிப்படுகின்றது.

## எதிரொலி

திருக்குறளில் உள்ள அதிகாரங்களுக்குத் தலைப்புஇட்டவர் திருவள்ளுவரே. அந்தத் தலைப்புக்களில் ஓசை இன்பமும், பொருட்செறிவும் உண்டு.

'செய்ந்நன்றி அறிதலும் சிற்றினம் இன்மையும்'

என்ற சிறுபாணாற்றுப் படையின் அடி (207), செய்ந்நன்றி அறிதல் (10), சிற்றினம் சேராமை (45) - ஆகிய அதிகாரங்களின் தலைப்புக்களை நினைவூட்டுகின்றன. அந்தப்பாட்டில் இடம் பெற்றுள்ள 'அறிவு நன்குடைமை' (216) என்ற தொடர் அறிவுடைமை (43) என்ற அதிகாரத்தின் தலைப்பை ஒத்துள்ளது.

சில திருக்குறளில் உள்ள அதிகாரங்களின் தலைப்புக்களும் சங்க இலக்கியத் தொடர்களிற் சிலவும் ஒப்புமையுடையன என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

## வான்புகழ்

திருவள்ளுவரது புலமை மாண்பை அளந்து கண்டவர் பரிமேலழகர் அவர் 'எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லோர்க்கும் பொதுப்படக் கூறுதல் திருவள்ளுவரது இயல்பு' என்று கூறியுள்ளார். (குறள். 322 உரை)

முன்னோர் மொழிந்த மொழி பொருளைப் பொன்னேபோற் போற்றும் வள்ளுவர் பண்பைக் கண்டோம்

'எல்லாப் பொருளும் இதன்பால்உள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லை' (திருவள்ளுவமாலை)

என்று புலவர்கள் புகழ்ந்து பாடும் சிறப்பைத் திருக்குறள் பெற்றுள்ளது.

பொதுமை நோக்கும் புரட்சி மனமும், ஆழ்ந்த புலமையும் உடைய திருவள்ளுவர் இயற்றிய நூல் தமிழ் நாட்டிற்கு மட்டும் உரியதன்று. அந்நூல் உலகிற்கே உரிய பொது நூல். உலகிற்குப் பொது நூல் வழங்கிய பெருமை தமிழ்நாட்டிற்கு உண்டு.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே — தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு!' —பாரதியார்.

—○—

**சங்கச் செய்திகள் :**

# மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

---

## புலவர் (பண்டித) தேர்வுகள்

### அஞ்சல்வழிப் பாடத் திட்டம் (Postal Tution)

1) மதுரைத் தமிழ்ச்சங்கம் 'புலவர்' (பண்டித) தேர்வில் தேர்ச்சி பெற்றோர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணி புரியத் தகுதியுடையவர் என M. No. 93226/E2/66-I (dated 24—9—66) மூலம் அரசினர் அனுமதியளித்துள்ளனர்.

2) நுழைவு, இளம்புலவர், புலவர் ஆகிய தேர்வுகட்குச் செல்வோர் பலரது வேண்டுகோட்கு இசைந்து, சென்ற ஆண்டு முதல் தமிழ்ச்சங்கம் நடத்தும் இத்தேர்வுகட்கு அஞ்சல் வழிப்பாடம் பயிற்றுவிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

3) மதுரை, சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் தேர்வுக்குரிய பாடத் திட்டங்களையொட்டி, மதுரைத் தமிழ்ச் சங்கம் நுழைவு, இளம் புலவர் ஆகிய தேர்வுகட்குப் பாடத் திட்டங்களை அமைத்துள்ளது.

4) எனவே, மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்தும் தேர்வுகட்குச் செல்வோர் மட்டுமன்றி, மதுரை, சென்னைப் பல்கலைக் கழகங்கள் நடத்தும் வித்துவான் தேர்வுகட்குச் செல்வோரும் அஞ்சல்வழிப் பயிற்று முறையில் கலந்துகொண்டு பயன் பெறலாம்.

5) இவ்வாண்டு, 1969 நுழைவுத் தேர்வுக்குச் செல்பவருக்கு ஓராண்டும், 1969 இளம் புலவர் தேர்வுக்குச் செல்பவருக்கு ஓராண்டும் 1970 இளம் புலவர் தேர்வுக்குச் செல்பவர்களுக்கு ஈராண்டும் பயிற்சி அளிக்கப்படும்.

6) இப்பயிற்சிகளிற் கலந்துகொள்ளும் ஒவ்வொருவரும் ஓராண்டுப் பயிற்சிக் குரிய கட்டணம் ரூ. 60 செலுத்த வேண்டும்.

7) ஒரே முறையிற் செலுத்துவதாயிருப்பின், சூலை 25-ஆம் நாளுக்குள் ரூ. அறுபதும், இரு முறையில் செலுத்துவதாயிருப்பின் சூலை 25–ஆம் நாளுக்குள் ரூ. முப்பத்தைந்தும், அக்டோபர் 25–ஆம் நாளுக்குள் ரூ. முப்பத்தைந்துமாகச் செலுத்தவேண்டும்.

8) நாங்கள் அனுப்பும் விண்ணப்பத்தாளை நிறைவு செய்து அனுப்பும்பொழுது, அதனுடன் பணவிடை (M. O.) மூலம் சட்டணம் அனுப்பி, அதன் இரசீதையும் (M. O. Receipt) கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவேண்டும். "மேலாளர், அஞ்சற்பாடப் பிரிவு, மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை–1."

9) நுழைவுத் தேர்வுக்குச் செல்வோர் 16 வயதுக்கு மேற்பட்டவராயிருத்தல் வேண்டும்; குறைந்த அளவு எட்டாவது வகுப்பில் தேறியிருக்க வேண்டும்.

10) தேர்வுக்குரிய பாடங்கள் முழுவதிற்கும் பயிற்சி அளிக்கப்படும்.

11) முதலில் பாடங்கட்குரிய வினாக்கள் மட்டும் பகுதி பகுதிகளாகப் பிரித்து அனுப்பப்படும்.

12) பயிற்சிகளிற் கலந்துகொள்வோர் ஒவ்வொருவரும் அவ்வினாக்கட்குரிய விடைகளை எழுதி நாங்கள் குறிப்பிடுங் காலத்திற்குள் அனுப்பிவிட வேண்டும்.

13) அனுப்பப்படும் விடைகள் தக்க ஆசிரியர்களால் திருத்தப்பட்டுப் பிழைகளும் சுட்டிக்காட்டப்படும்.

14) திருத்தப்பட்ட விடைகளும், சிறந்த பேராசிரியர்களைக் கொண்டு ஆயத்தஞ்செய்த விடைகளும் அனுப்பிவைக்கப்படும்.

15) தமிழ்ச்சங்கம் அனுப்பும் விடைகளை அவரவர் விடைகளோடு ஒப்பிட்டுப் பார்த்துப் பிழைகளை நீக்கித் தேர்வுக்குரிய முறையில் நன்கு படித்துக் கொள்ளவும்.

16) இம்முறையில், தேர்வுகட்குரிய பாடங்கள் எல்லாவற்றிற்கும்

ஆகச்டுத் திங்கள் முதல் வாரத்திலிருந்து பகுதி பகுதியாகப் பயிற்சி அளிக்கப்படும்.

17) 'வினுவுக்குரிய விடை இது' எனத் தெரியாது கலங்கும் ஒவ்வொருவருக்கும் இப்பயிற்சி முறை ஒரு சிறந்த வழிகாட்டியாயமைந்து உற்றுழியுதவும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

18) ஆகவே, தனிப்படத் தேர்விற்குச் செல்வோர் (Private Candidates) அனைவரும் கல்லூரி மாணவர்களும் இப்பயிற்சிகளிற் கலந்துகொண்டு பயன் பெறுவார்களாக!

19) சென்ற ஆண்டு இங்குப் பயிற்சிபெற்ற மாணவர்கள் பெரும்பாலோர் நுழைவுத் தேர்வு எழுதி வெற்றி பெற்றுள்ளனர்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி.—

மேலாளர், அஞ்சற்பாடப் பிரிவு,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
அஞ்சற்பெட்டி எண்: 215, மதுரை-1.

கி. பழநியப்பன்,
செயலாளர்.

## தமிழ்ச் சங்கத் தேர்வுகள்:

வழக்கம்போல், இவ்வாண்டும் (மார்ச் 1968), மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடாத்திய பள்ளியிறுதி வகுப்புத் தமிழ்த் தேர்வில் (S. S. L. C.) தமிழகமெங்கும் ஆயிரக்கணக்கான மாணவர் பங்கு பெற்றனர், அரசினர் பொதுத்தேர்விற்கு முன்னரே, மாணவர்களின் தேர்ச்சிப் பட்டியலும், மதிப்பெண்களும், உரிய பள்ளிகட்கு அனுப்பப்பட்டு விட்டன. பின்னர், ஒவ்வொரு பள்ளியிலும் முதன்மையாகத் தேறிய மாணவர்க்குப் பரிசுகள் (நூல்களாக) வழங்கப்பட்டன. மாவட்ட வாரியாகத் தேர்ச்சி பெற்ற மாணவர் விவரம் கீழே தரப்பெற்றுள்ளன:

| வ. எண். | பெயர் | பள்ளி | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | A. ஆறுமுகம் | தென்னிந்திய திருச்சபை உயர்நிலைப் பள்ளி, நாகப்பட்டினம். | தஞ்சை |
| | (இம்மாணவர் மாநில முதற்பரிசு பெற்றுள்ளார்) | | |
| 2) | வே. சாம்ராசு | L. M. S. உயர்பள்ளி, ஜேம்ஸ் டவுன். | கன்னியாகுமரி |
| 3) | டே. மரிய அந்தோணி சோசப், | தூய சவேரியார் உயர் பள்ளி, தூத்துக்குடி | நெல்லை |
| 4) | க. வேலுச்சாமி | அரசினர் உயர்பள்ளி, புன்செய்ப்புளியம்பட்டி. | கோவை |
| 5) | A. இராமு | அரசினர் உயர்பள்ளி, பெத்தநாயக்கன் பாளையம். | சேலம் |
| 6) | கு. அரங்கநாதன் | அரசினர் உயர்பள்ளி, கம்பைநல்லூர். | தருமபுரி |
| 7) | J. முருகேசன் | ஸ்ரீ விவேகானந்தா வித்தியாவனம் உயர்பள்ளி, திருப்பராய்த்துறை. | திருச்சி |
| 8) | N. செகந்நாதன் | அரசினர் உயர்பள்ளி, கொட்டமிட்டா. | வடாற்காடு |
| 9) | ப.வேங்கடவரதன், | அரசினர் உயர்பள்ளி, புராணசிங்குபாளையம் | தென்னாற்காடு |
| 10) | சா சேம்சு நவகுமார் | பரி. கொலம்பா உயர் பள்ளி, செங்கற்பட்டு. | செங்கற்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| 11) | V. K. ஆறுமுகம் | S.S.V. உயர்பள்ளி, சென்னை-3 | சென்னை |
| 12) | கு. பாலசுப்பிரமணியம் | ஆயிரவைசிய உயர்பள்ளி, சாத்தூர். | இராமநாதபுரம் |
| 13) | R. சுந்தரராசன் | தியாகராசர் நன்முறை உயர்பள்ளி, மதுரை-9. | மதுரை |
| 14) | அரிதாசு | பெத்தி செமினேர் உயர்பள்ளி, பாண்டிச்சேரி—1. | பாண்டிச்சேரி |

## சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் இறுதிநிலைத் தேர்வுக்குச் சென்று (1968) வெற்றிபெற்ற செந்தமிழ்க் கல்லூரி மாணவர்களின் பட்டியல்.

(தேர்வெழுதியோர் 27 பேர்; வெற்றி பெற்றோர் 26 பேர்)

**முதல் வகுப்பு:—**

| | | பதிவெண் |
|---|---|---|
| 1) | சி. இராசு | 3215 |
| 2) | S. சித்ரா | 3326 |
| 3) | J. R. இராசேசுவரி | 3341 |

**இரண்டாம் வகுப்பு:—**

| | | |
|---|---|---|
| 1) | பெ. பாலசரசுவதி | 3324 |
| 2) | வி. பாமா | 3325 |
| 3) | R. பிளாரன்சு லீலா | 3327 |
| 4) | G. கோகிலா | 3328 |
| 5) | R. S. கிருட்டிணம்மாள் | 3333 |
| 6) | S. லலிதா | 3334 |
| 7) | பி. மணிமேகலை | 3337 |
| 8) | I. மேரிவில்லிமார்பாய் | 3338 |
| 9) | S. பிரேமா | 3339 |
| 10) | A. இராசலட்சுமி | 3340 |
| 11) | கீ. சேகரன் | 3216 |

**மூன்றும் வகுப்பு:—**

| | | |
|---|---|---|
| 1) | K. கணபதி | 3212 |

| | | | |
|---|---|---|---|
| 2) | N. மீனுட்சிசுந்தரம் | ... | 3213 |
| 3) | வ. மு. பெரியசாமி | ... | 3214 |
| 4) | கி. வரதராசன் | ... | 3217 |
| 5) | N. வெங்கடாச்சாரி | ... | 3218 |
| 6) | A. செயலட்சுமி | ... | 3329 |
| 7) | R. கமலா | ... | 3331 |
| 8) | S. கல்யாணி | ... | 3330 |
| 9) | S. கொண்டம்மாள் | ... | 3332 |
| 10) | V. லூசியாள் ரோசரி | ... | 3335 |
| 11) | S. மாலதி | ... | 3336 |
| 12) | R. சுப்புலட்சுமி | ... | 3342 |

**புலவர் தேர்வு :**

இவ்வாண்டு (1968) நடைபெற்ற மதுரைத் தமிழ்ச்சங்க நுழைவு, இளம்புலவர், புலவர் (பண்டிதம்) தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரப் பட்டியல் இவ்விதழின் இறுதிப் பக்கங்களிற் காணலாம்.

**செந்தமிழ்க் கல்லூரி :**

இச்சங்கத்தின் செந்தமிழ்க் கல்லூரி 13-6-68இல் திறக்கப் பட்டது. இவ்வாண்டிலிருந்து இக்கல்லூரியைப் பட்டப்படிப்புக் கல்லூரியாக (Degree College) ஆக்குதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

———

**வரப்பெற்ருேம்:**

(1) திருக்குறள்: சிங்கள மொழி பெயர்ப்பு. மொழிபெயர்த்தவர்: G. மிசிகாமி, இலங்கை.

(2) மணிமேகலை: சிங்கள மொழிபெயர்ப்பு. மொழிபெயர்த்தவர்: பண்டிதர் இஃச்செல்லே தருமரத்தின அடிகள், இலங்கை.

[இவ்விரு நூல்களையும் அன்பளிப்பாக உதவியவர்: திரு. சி. சத்திய மூர்த்தி B. O. L., தமிழ் ஆராய்ச்சித் துறை, கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரம். இவருக்கு எம் நன்றி.]

# மதுரைத் தமிழ்ச் சங்கம்

## 1968-புலவர் ( பண்டிதம் ) தேர்வு முடிவுகள்

### I. நுழைவுத்தேர்வு

**தேர்விடம் : மதுரை**

| வரிசை எண் | தேர்வு எண் | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| | | முதல் வகுப்பு : இல்லை | |
| | | இரண்டாம் வகுப்பு : இல்லை | |
| 1 | 3 | ஆ. பசுவையயன் | மூன்று |
| 2 | 4 | சு. தண்டபாணி | " |
| 3 | 5 | நா. திருமூர்த்தி | " |
| 4 | 9 | கு. முருகையன் | " |
| 5 | 16 | ஜெகந்நாத சீனிவாசன் | " |
| 6 | 23 | எ. தா. ஜான் எ. இரத்தினராஜ் | " |
| 7 | 27 | இ. பண்டாரம் | " |
| 8 | 29 | K மேரி ஜோஸ்பீன் | " |
| 9 | 30 | மு. அனுராதா | " |
| 10 | 31 | கி. குமுதம் | " |
| 11 | 32 | நா. நவமணி | " |

**தேர்விடம் : திருப்பனந்தாள்**

**இல்லை**

**தேர்விடம் : மார்த்தாண்டம்**

| | | | |
|---|---|---|---|
| 12 | 42 | Y. சைலம் | " |
| 13 | 46 | ஏ. பிரான்சிஸ் | " |
| 14 | 47 | பி. இரவீந்திரன் நாயர் | " |
| 15 | 48 | S. பாலையன் | " |
| 16 | 49 | ஸி. நேசமணி | " |

தேர்விடம்: மார்த்தாண்டம்

| வரிசை எண் | தேர்வு எண் | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| 17 | 50 | ப. தங்கராஜன் | மூன்று |
| 18 | 51 | ஜெ. ஜாண் ரேஸ் | " |
| 19 | 52 | R. உத்தரியமுத்து | " |
| 20 | 53 | K. செல்வராஜ் | " |
| 21 | 54 | A. பொன்னய்யன் | " |
| 22 | 58 | C. செல்லமுத்து | " |
| 23 | 59 | P. முகம்மது இஸ்மாயில் | " |
| 24 | 60 | S. P. சுகுமாரன் நாயர் | " |
| 25 | 61 | A. மார்க்கிஸ் | " |
| 26 | 65 | சி. செல்வநாயகம் | " |
| 27 | 69 | கே. ஸரஸ்வதி | " |
| 28 | 70 | எம். சி. லீலாபாய் | " |
| 29 | 71 | கே. ஜானகி | " |
| 30 | 72 | N. கோமதி அம்மா | " |
| 31 | 73 | எ. ஸிற்றில் பிளௌவர் | " |
| 32 | 75 | P. கனகம்மாள் | " |
| 33 | 76 | K. சரஸ்வதி அம்மாள் | " |
| 34 | 77 | K. லாசம்மா | " |
| 35 | 78 | C. சாரதா | " |
| 36 | 79 | A. தேவதானம் | " |
| 37 | 80 | M. மேரி | " |
| 38 | 81 | S. ஜோதிஸ்மதி அம்மா | " |
| 39 | 83 | A. அம்மாள் | " |
| 40 | 84 | T. ரேசம்மா | " |
| 41 | 85 | C. தங்கபுஷ்ப அருள்பாய் | " |

தேர்விடம்: மார்த்தண்டம்

| வரிசை எண் | தேர்வு எண் | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| | | | மூன்று |
| 42 | 86 | M. சுசீலாபாய் | " |
| 43 | 87 | A. ஸ்ரீ தேவியம்மா | " |
| 44 | 88 | N. தங்கம் | " |
| 45 | 92 | P. கேஸி | " |
| 46 | 93 | B. லிட்டில் மேரி | " |
| 47 | 94 | A. மேரி | " |
| 48 | 95 | ஜெ. டெய்ஸிபாயி | " |
| 49 | 96 | பி. விஜயம்மா | " |
| 50 | 98 | K. கங்கேசுரி அம்ம | " |
| 51 | 99 | ஸி. நேசதீபம் | " |
| 52 | 101 | T. பாலம்மாள் | " |
| 53 | 102 | M. மரியரெத்தினம் | " |
| 54 | 103 | M. கோமதி | " |
| 55 | 104 | S. கனகம்மாள் | " |
| 56 | 105 | M. புஷ்பம் | " |
| 57 | 103 | T. தாய் | " |
| 58 | 109 | S. பிலோமினுள் | " |
| 59 | 110 | ஸி. தங்க லீல | " |
| 60 | 111 | C. S. பிரேமலதா தேவி | " |
| 61 | 112 | A. ஞானம்மா | " |
| 62 | 113 | N. சரஸ்வதி | " |
| 63 | 115 | M. லிற்றில் பிளவ்வர் | " |
| 64 | 116 | A. செல்வி | " |
| 65 | 117 | ச. பகவதி அம்மா | " |

தேர்விடம் : மார்த்தாண்டம்

| வரிசை எண் | தேர்வு எண் | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| 66 | 118 | வி. பகவதி அம்மா | மூன்று |
| 67 | 119 | K. G. எலியாம்மா | " |
| 68 | 120 | S. சிறீகுமாரி அம்மாள் | " |
| 69 | 121 | வி. சரளா தேவி | " |
| 70 | 122 | S. மீனாட்சி அம்மாள் | " |
| 71 | 123 | பி. ஒறிசலம்மாள் | " |
| 72 | 126 | A. பகவதியம்மா | " |
| 73 | 127 | A. அம்முக்குட்டி | " |
| 74 | 128 | A. நாகம்மா | " |
| 75 | 129 | பி. பேபி | " |
| 76 | 130 | பி. வசந்தகுமாரி தங்கச்சி | " |
| 77 | 131 | D. ஸரசம்ம | " |
| 78 | 132 | P. செல்லத்தாய் | " |
| 79 | 133 | M. தங்கலீலாள் | " |
| 80 | 134 | M. கிறிஸ்றீனள் ஞானப்பூ | " |

# மதுரைத் தமிழ்ச் சங்கம்
# 1968-இளம் புலவர் தேர்வு முடிவுகள்

தேர்விடம் : மதுரை

| வரிசை எண் | தேர்வு எண் | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| 1 | 136 | என். வேலுச்சாமி | மூன்று |
| 2 | 139 | பொ. கிருஷ்ணன் | " |
| 3 | 142 | R. நடராசன் | " |

## தேர்விடம்: மதுரை

| வரிசை எண் | தேர்வு எண் | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| 4 | 144 | ப. சுப்பிரமணியன் | இரண்டு |
| 5 | 145 | தி. ஆராவமுதன் | மூன்று |
| 6 | 147 | சுப. இராஜகோபால் | ,, |
| 7 | 148 | L. A. கிருஷ்ணன் | ,, |
| 8 | 149 | ஜெ. வெங்கடேசன் | ,, |
| 9 | 150 | செ. கருணாநிதி | ,, |
| 10 | 152 | R. ஆறுமுகம் | ,, |
| 11 | 157 | கு. சி. சோதி இராமலிங்கம் | ,, |
| 12 | 163 | ஞா. தாணுமாலையப் பெருமாள் | ,, |
| 13 | 164 | இரா. கரந்தமலைச் சந்திரகுமார் | ,, |
| 14 | 165 | சே. சீனிவாசன் | ,, |
| 15 | 166 | மு. கதிரவன் | ,, |
| 16 | 167 | தி. அப்துல் மஜீத் | ,, |
| 17 | 169 | க. காசி | ,, |
| 18 | 170 | சு. சேசாத்திரி நாதன் | ,, |
| 19 | 171 | B. M. காமாட்சி | இரண்டு |
| 20 | 172 | கா. குஞ்சரம் | மூன்று |
| 21 | 173 | உ. கஸ்தூரிபாய் | ,, |
| 22 | 174 | க. சித்தம்மாள் | ,, |
| 23 | 175 | ரெ. ராசாமணி | ,, |
| 24 | 176 | ச. சேவியர் | இரண்டு |
| 25 | 177 | க. பத்மா | ,, |
| 26 | 178 | இரா . தனலெக்குமி | மூன்று |
| 27 | 179 | ஆர். எஸ். ராசேசுவரி | ,, |
| 28 | 180 | இரா. சந்திரா | இரண்டு |

தேர்விடம்: **மதுரை**

| வரிசை எண் | தேர்வு எண் | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| 29 | 181 | பெ. சகுந்தலா | மூன்று |
| 30 | 182 | நா. தனம் | ,, |
| 31 | 183 | செ. செல்லம்மாள் | ,, |
| 32 | 184 | க. செயலெக்குமி | ,, |
| 33 | 185 | க. ஜெகதாம்பாள் | ,, |
| 34 | 186 | வெ. தனலெட்சுமி | ,, |
| 35 | 187 | R. V. சுப்பலெட்சுமி | ,, |
| 36 | 188 | பெ. மாயாதேவி | ,, |
| 37 | 191 | இரா. இலக்குமி | ,, |
| 38 | 192 | இரா. சிவகாமி | ,, |
| 39 | 195 | P. K. ரஞ்சிதம் | இரண்டு |
| 40 | 196 | மு. கண்ணம்மாள் | மூன்று |

———

தேர்விடம்: **திருப்பனந்தாள்**

| | | | |
|---|---|---|---|
| 41 | 198 | மு. சு. இராசன் | முதல் |
| 42 | 200 | தி. அ. பாலகிருட்டிணன் | மூன்று |
| 43 | 206 | க. மகாலிங்கம் | இரண்டு |
| 44 | 208 | பெ. நடேசன் | ,, |
| 45 | 209 | க நாகம்மாள் | மூன்று |
| 46 | 210 | A. சாந்தா தேவி | ,, |
| 47 | 211 | K. கலாவதி | இரண்டு |

———

தேர்விடம்: **மார்த்தாண்டம்**

| | | | |
|---|---|---|---|
| 48 | 218 | P. ரெத்தினம் | மூன்று |
| 49 | 220 | ஆ. செல்லதுரை | ,, |

தேர்விடம்: **மார்த்தாண்டம்**

| வரிசை எண் | தேர்வு எண் | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| 50 | 221 | செ. சிலுவைமுத்து | மூன்று |
| 51 | 226 | C. சிவஞானம் | ” |
| 52 | 228 | இ. முத்தையன் | ” |
| 53 | 229 | T. பால்துரைமணி | ” |
| 54 | 231 | D. சுந்தரராஜ் | ” |
| 55 | 232 | P. நேசையன் | ” |
| 56 | 233 | K. நடராஜன் | இரண்டு |
| 57 | 234 | P. இராமகிருஷ்ணன் | மூன்று |
| 58 | 235 | D. அலசி | ” |
| 59 | 236 | P. தங்கப்பன் | ” |
| 60 | 239 | இரா. சத்தியதாஸ் | ” |
| 61 | 242 | மா. தாசையன் | ” |
| 62 | 243 | ஞா. சூசைமரியான் | ” |
| 63 | 246 | S. தாசையன் | ” |
| 64 | 249 | தா. திருநாவுக்கரசு | ” |
| 65 | 255 | V. ருக்மணி | ” |
| 66 | 256 | C. கிளேடிஸ் | ” |
| 67 | 265 | C. லிசிலெற் ஞான ஜோதிபாய் | ” |
| 68 | 266 | D. கன்னி மரியாள் | ” |
| 69 | 267 | ஆ. மரியரெத்தினபாய் | ” |
| 70 | 268 | க. தங்கம்மாள் | ” |
| 71 | 272 | T. பேபி கமலா | இரண்டு |
| 72 | 273 | N. சரசம்மாள் | மூன்று |
| 73 | 275 | T. தங்கலட்சுமி | ” |
| 74 | 278 | K. கிருஷ்ணம்மாள் | ” |

தேர்விடம்: மார்த்தாண்டம்

| வரிசை எண் | தேர்வு எண் | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| 75 | 279 | P. செல்வி அமலாபாய் | மூன்று |
| 76 | 280 | இரா. ஸ்டெல்லா மேரி | ,, |
| 77 | 290 | N. செல்ல நாடாச்சி | ,, |
| 78 | 292 | கு. தங்க ஞேஸ் | ,, |
| 79 | 293 | P. லீலாபாய் | ,, |
| 80 | 294 | A. கிறிஸ்றிபாய் | ,, |
| 81 | 297 | K. ராஜாமணி | ,, |
| 82 | 298 | M. அல்போன்ஸ் | ,, |
| 83 | 299 | A. ரோசம்மாள் | ,, |
| 84 | 300 | V. கிருஷ்ணம்மாள் | ,, |
| 85 | 301 | I. ஜெஸந்தா மேரி | ,, |
| 86 | 302 | I. M. ரோசம்மாள் | ,, |
| 87 | 303 | Y. மேரிபாய் | ,, |
| 88 | 304 | M. செல்விபாய் | ,, |
| 89 | 305 | A. மெட்டில்டா | ,, |
| 90 | 306 | P. திரசம்மாள் | ,, |
| 91 | 307 | P. கமலம் | ,, |
| 92 | 311 | S. நான்ஸி பென்னட் | ,, |
| 93 | 312 | C. எமிம்மாள் | ,, |
| 94 | 313 | G. கோமதி | ,, |
| 95 | 314 | P. நாகம்மாள் | ,, |
| 96 | 315 | N. சரோஜினிபாய் | ,, |
| 97 | 318 | R. ஜானட் | ,, |
| 98 | 319 | N. மேரி | ,, |
| 99 | 320 | P. கமலாபாய் | ,, |

தேர்விடம்: **மார்த்தாண்டம்**

| வரிசை எண் | தேர்வு எண் | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| 100 | 321 | P. அமிர்தம் | மூன்று |
| 101 | 324 | M. பிளாரன்சு ஜெசி | " |
| 102 | 325 | S. மேரி லூய் சாள் | " |
| 103 | 326 | G மேரி புஷ்ப பாய் | " |
| 104 | 327 | S. மரிய திரேசம்மாள் | " |
| 105 | 328 | S. கத்தரினாள் | " |
| 106 | 329 | M. லூர்துமேரி | " |
| 107 | 330 | R. மரிய அகஸ்தினாள் | " |
| 108 | 331 | S. எமிலிபாய் | " |
| 109 | 332 | K. லலிதா ஜாய் | " |
| 110 | 333 | C. பெல்சிபாய் | " |
| 111 | 334 | M செல்லம்மாள் | " |
| 112 | 335 | V. ரீத்தம்மாள் | " |
| 113 | 336 | G. செல்வி | " |
| 114 | 337 | V. அமலோர்பவம் | " |
| 115 | 338 | T. இராசதங்கம் | " |
| 116 | 339 | N. மேர்சி நிவேதிதா | " |
| 117 | 340 | தே. ஏசுநேசம் | " |
| 118 | 341 | சி. ஜானகி | " |
| 119 | 342 | ஜே. ஹெர்லிங்சார் லெற் | " |
| 120 | 345 | டே. பத்மினிபாய் | " |
| 121 | 348 | ஏ. சிசிலி | " |
| 122 | 351 | P. பால்தங்கம் | " |
| 123 | 353 | P. செல்லம்மா | " |
| 124 | 353 | M. கமலம் | " |

தேர்விடம்: மார்த்தாண்டம்

| வரிசை எண் | தேர்வு எண் | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| 125 | 356 | C தங்கபாய் | மூன்று |
| 126 | 357 | G. ஞேஸ் கனகபாய் | ,, |
| 127 | 358 | B. சுசீலா | ,, |
| 128 | 359 | K. சரஸ்வதி | ,, |
| 129 | 360 | M. சரஸ்வதி | ,, |
| 130 | 361 | T. ஞேஸ்லெட் | ,, |
| 131 | 362 | P. பொன்னேசம் | ,, |
| 132 | 363 | T. B. வசந்தகுமாரி | ,, |
| 133 | 364 | வ. சாந்தா | ,, |
| 134 | 366 | டி. ஞேஸ்லெட் வயோலா | ,, |
| 135 | 367 | இரா. ஞேசிலி | ,, |
| 137 | 368 | எ. கனகம்மாள் | ,, |
| 137 | 369 | G. ஆனந்தாபாய் | ,, |
| 138 | 370 | ஜி. பேபி சரோஜம் | ,, |
| 139 | 373 | K. விமலாவதி | ,, |
| 140 | 376 | S. ஞான புஷ்பபாய் | ,, |
| 141 | 377 | D. வல்சலா | ,, |
| 142 | 378 | K. வசந்தகுமாரி | ,, |
| 143 | 379 | P. சரஸ்வதி | ,, |
| 144 | 380 | சி. சரோஜினி | ,, |
| 145 | 381 | சி. ஞேசிலற் | ,, |
| 146 | 382 | யோ. இராஜம்மாள் | ,, |
| 147 | 383 | த. பார்வதி | ,, |
| 148 | 384 | ஸி. மேழ்சி கமலபாய் | ,, |

தேர்விடம்: மார்த்தாண்டம்

| வரிசை எண் | தேர்வு எண் | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| 149 | 385 | எஸ். மரியநேசம் | மூன்று |
| 150 | 386 | பி. ஊசம்மாள் | " |
| 151 | 387 | ஸி. லீலாபாய் | " |
| 152 | 388 | இ. சுந்தரலீலா | " |
| 153 | 390 | C. அமலோற்பம் | " |
| 154 | 391 | S. கனகபாய் | " |
| 155 | 393 | R. விமலாபாய் | " |
| 156 | 394 | ஞா. அற்புதம் | " |
| 157 | 395 | O. உம்முசல்மாள் | " |
| 158 | 396 | ஆ. சந்திராதங்கபாய் | " |
| 159 | 398 | டே. பெட்சி | " |
| 160 | 399 | சா. ஜபி ஹெலன் | " |
| 161 | 401 | இரா. விமலாபாய் | " |
| 162 | 402 | இரா. சிசிலி | " |
| 163 | 404 | கோ. சுமிதாபாய் | " |
| 164 | 406 | K. கமலம் | " |
| 165 | 411—உ | M. பொன்னம்மா | " |

# 1968-புலவர் ( பண்டிதம் ) தேர்வு முடிவுகள்

தேர்விடம்: மதுரை

| வரிசை எண் | தேர்வு எண் | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| 1 | 412 | அரங்க ராசரத்தினம் | மூன்று |
| 2 | 413 | N. சேதுராமன் | இரண்டு |
| 3 | 414 | கா. மு. நூர் முகம்மது | மூன்று |
| 4 | 415 | பா. சையத் இப்ராஹிம் பாட்சா | " |
| 5 | 416 | சு. பாலையா டேவிட் | " |
| 6 | 417 | பி. கூழையன் | " |
| 7 | 418 | வித்துவான் ப. தமிழ்மணி | முதல் |
| 8 | 419 | மு. முத்தம்பலம் | மூன்று |
| 9 | 423 | கா. மகமது உசேன் | " |
| 10 | 426 | பொ. தங்கப்பன் | " |
| 11 | 429 | கே.கே. முத்துசாமி | " |
| 12 | 430 | க. பானு | " |
| 13 | 433 | ந. மீனாட்சிசுந்தரம் | " |
| 14 | 434 | நீ. சேகரன் | முதல் |
| 15 | 436 | கி வரதராசன் | மூன்று |
| 16 | 437 | சி. இராசு | முதல் |
| 17 | 439 | கு. கணபதி | மூன்று |
| 18 | 440 | சி பிரேமா | இரண்டு |
| 19 | 441 | I. மேரி வில்லிய மார்பாய் | மூன்று |
| 20 | 442 | சே. லலிதா | முதல் |
| 21 | 443 | R. S. கிருஷ்ணம்மாள் | இரண்டு |
| 22 | 444 | சோ. கல்யாணி | மூன்று |

**தேர்விடம்: மதுரை**

| வரிசை எண் | தேர்வு எண் | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| 23 | 445 | சி. மாலதி | இரண்டு |
| 24 | 446 | ஆ. இராஜலெக்ஷ்மி | மூன்று |
| 25 | 448 | சு. கொண்டம்மாள் | " |
| 26 | 449 | கோ. கோகிலா | இரண்டு |
| 27 | 450 | சு. சித்ரா | " |
| 28 | 451 | இரா. பிளாரன்ஸ் லீலா | மூன்று |
| 29 | 452 | பெ. பாலசரசுவதி | இரண்டு |
| 30 | 453 | J. R. இராஜேஸ்வரி | முதல் |
| 31 | 454 | வி. பாமா | இரண்டு |
| 32 | 455 | ப. மணிமேகலை | " |
| 33 | 456 | அ. ஜெயலெக்ஷ்மி | மூன்று |
| 34 | 457 | வி. லூசியாள் ரோசரி | " |
| 35 | 459 | முத்துக்குமாரசுவாமிநாகரத்தினம் | " |
| 36 | 460 | வ. சந்திராமேரி | " |
| | | **தேர்விடம்: திருப்பனந்தாள்** | |
| 37 | 461 | இலிங்க. பழனிச்சாமி | " |
| 38 | 462 | ஆ. பெரியசாமி | " |
| 39 | 463 | வீ. கந்தசாமி | " |
| 40 | 465 | மொ, இராமலிங்கம் | இரண்டு |
| 41 | 466 | அ. இரெ. பக்கிரிசாமி | மூன்று |
| | | **தேர்விடம்: மார்த்தாண்டம்** | |
| 42 | 471 | றி. எடிஸன்ஞான ஜான் ஸ்லாஸ் | " |
| 43 | 474 | அ. அலீசன் | " |
| 44 | 475 | N. சத்தியநாதன் | " |

## தேர்விடம்: மார்த்தாண்டம்

| வரிசை எண் | தேர்வு எண் | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| 45 | 477 | N. ஞானமுத்து நாடார் | மூன்று |
| 46 | 478 | A. சாமுவேல் | " |
| 47 | 479 | சி. வின்செண்ட் | " |
| 48 | 480 | பி. மைக்கேல் செல்வன் | " |
| 49 | 481 | க. தருமசிலன் | " |
| 50 | 482 | பி. இரத்தினம் | " |
| 51 | 483 | M. மரிய லூக்கோஸ் | " |
| 52 | 484 | M. செல்லத்துரை | " |
| 53 | 486 | அ. தியாகராசன் | " |
| 54 | 487 | கா. செந்திவேல் | " |
| 55 | 488 | அ. சத்தியதாஸ் | " |
| 56 | 489 | பொ. சுப்பிரமணியம் | " |
| 57 | 491 | கு. அச்சுதன் | " |
| 58 | 494 | K. பாயி | " |
| 59 | 495 | K. முத்தாட்சி | " |
| 60 | 496 | பி. மரிய இராஜேஸ்வரி | " |
| 61 | 497 | A. லலிதாபாயி | " |
| 62 | 500 | ஈ. அன்னக்கிளி | " |
| 63 | 501 | D. கிரேஸ் | " |
| 64 | 502 | P. சரோஜினிபாய் | " |
| 65 | 503 | T. தங்கரெத்தினபாய் | " |
| 66 | 504 | மு. கோசலை | இரண்டு |
| 67 | 505 | M. தங்கம்மா | மூன்று |
| 68 | 506 | லில்லி சாலோமி | " |
| 69 | 507 | சு. பாக்கியலட்சுமி | " |

## தேர்விடம்: மார்த்தாண்டம்

| வரிசை எண் | தேர்வு எண் | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| 70 | 508 | M. செல்லத்தாய் | மூன்று |
| 71 | 511 | D. மேழ்சி | " |
| 72 | 512 | பொ. செல்லத்தங்கம் | " |
| 73 | 515 | அ. மரியசொர்னம் | " |
| 74 | 516 | ப. மெர்ஸி | " |
| 75 | 517 | T. அம்சகுமாரி | " |
| 76 | 518 | S. மேரி நிர்மலா | " |
| 77 | 519 | J. லீலா புஸ்பபாய் | " |
| 78 | 520 | M. J. சாலோமி | " |
| 79 | 521 | T, சொர்னம் | " |
| 80 | 522 | A. மரியம்மாள் | " |
| 81 | 523 | D. ஐறி சுந்தரபாய் | " |
| 82 | 524 | S. சுந்தரம் | " |
| 83 | 525 | P. இரத்தினம் | " |
| 84 | 526 | A. செல்வமணி | " |
| 85 | 527 | D. சரோஜம் | " |
| 86 | 528 | K. இராஜலட்சுமி | இரண்டு |
| 87 | 529 | N. தெரசம்மாள் | மூன்று |
| 88 | 530 | N. மரியசரசம் | " |
| 89 | 531 | S. லலிதா | " |
| 90 | 532 | C. லீலா | " |
| 91 | 533 | த. நாகம்மாள் | " |
| 92 | 534 | K. ஞேசிலி | " |
| 93 | 535 | வே. செல்வி | " |

## தேர்விடம்: மார்த்தாண்டம்

| வரிசை எண் | தேர்வு எண் | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| 94 | 536 | ஜெ. சரோஜினிபாய் | மூன்று |
| 95 | 537 | பா. கமலபாய் | " |
| 96 | 538 | த. சிசியாள் | " |
| 97 | 539 | ப. மரியபுஷ்பம் | " |
| 98 | 540 | செ. லில்லி புஷ்பபாய் | " |
| 99 | 543 | தே. ஞானம்மாள் | " |
| 100 | 545 | M. S. ஸ்கொலாஸ்டிக்காள் | " |
| 101 | 546 | S. நாராயணப் பெருமாள் நாடார் | " |

1—5—68
மதுரை-1.

கி. பழநியப்பன்,
செயலர்.



அமரர் பாசுகர சேதுபதி அவர்கள்

(மறைவு: 1903)